வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 08.07.2023 சனிக்கிழமை | இதழ் : 211 | பக்கங்கள் : 16

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அரசியலில் எதுவும் நடக்கலாம்!

### கூறுகிறார் நிமல் சிறிபால டி சில்வா

கொழும்பு, ஜூலை 08

“ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எதுவும் நடக்கலாம். எனவே, தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர் தான் எந்த வேட்பாளரை நான் ஆதரிப்பேன் என்பதைப் பகிரங்கமாகக் கூறுவேன்.”

-இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

‘அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தான் என்று

15

## அடுத்த வார ஆரம்பத்தில் இந்தியா செல்லும் ரணில்!

கொழும்பு, ஜூலை 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வார ஆரம்பத்தில் இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொள்ள உள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்திய அரசாங்கத்தின் அழைப்புக்கு அமைய ஜனாதிபதி, இந்தியாவுக்கு செல்ல உள்ளார்.

ஜனாதிபதியுடன் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் சில இராஜ தந்திர அதிகாரிகளும் இந்தியாவுக்குச் செல்ல உள்ளனர்.

15

## கடனுக்கு கால அவகாசம் வழங்க இந்தியா திட்டம்!

கொழும்பு, ஜூலை 08

இலங்கையின் நிதிச் சுமையை குறைக்க உதவும் வகையில், கடனை மீளச் செலுத்த, இலங்கைக்கு 12 ஆண்டுகள் அவகாசம் வழங்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவின் ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் எம்.செந்தில் நாதன் இதனைத் தெரிவித்தாரென இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

15

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி உண்மை, நீதியை உறுதிப்படுத்துக

### முல்லைத்தீவில் நேற்று போராட்டம்




முல்லைத்தீவு, ஜூலை 08

“இலங்கை அரசே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தில் உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துக” எனும் தொனிப்பொருளில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் நேற்று முன்தினம் நீதிவான் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டன.

15

# மண்டைதீவு ஆலய கிணற்றில் 60 இளைஞர்களின் சடலங்கள்!

## சபையில் சிறீதரன் எம்.பி. பரபரப்பு தகவல்



கொழும்பு, ஜூலை 08

மண்கும்பான், அல்லைப்பிட்டியில் இருந்து அழைத்து வரப்பட்ட 60இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு மண்டைதீவு தோமையார் ஆலயக் கிணற்றில் வீசப் பட்டனர் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் நேற்று தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொக்குத்தொடுவாயில் பெண் போராளிகளின் உடல்கள் எனக் கூறப்படும் பல மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த நாட்டில் எங்கு பார்த்தாலும்

15

## முல்லைத்தீவில் மனிதப் புதைகுழி தடயங்களை அழிக்க அரசு முயற்சி

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சாடல்

முல்லைத்தீவு, ஜூலை 08

முல்லைத்தீவில் அகழப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் அரசாங்கம் தடயங்களை அழிப்பதற்கு முயற்சிக் கலாம் என்றும் அந்த விடயத்தில் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு உலக நாடுகள் உதவி செய்ய வேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா தனரஞ்சினி தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றுடன் 2,390 ஆவது நாளாக பல இன்னல்களுக்கு மத்தியில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக தெருவில் நின்று போராடி வருகின்றோம்.

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்

15

## மருந்துகளின் தரம் குறித்து ஆராய்வு

கொழும்பு, ஜூலை 08

மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்துகளின் தரம் உள்ளிட்டவற்றில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வு காண்பதற்காக விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட

15

## நல்லாட்சி காலத்திலேயே யாழில் கடல் அட்டைப் பண்ணை வந்தது!

### கூறுகின்றது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 08

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யுகமான நல்லாட்சி என்ற அரசிலேயே அரியாலையில் சீனர்களுக்கு கடலட்டை பண்ணைக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அன்று கண்மூடி மௌனியாக இருந்தவர்கள் எல்லாம் இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தூரநோக்கான மக்களின் நலத்திட்டங்களுக்குச் சேறுபூசுவதற்காக அல்லது அதைச் செய்யவிடக் கூடாது என்ற நோக்கில் தடுப்பதற்காக இவ்வாறான தமக்கு ஏற்ற ஒரு சிலரைக் கொண்டு அவதூறுகளை மேற்கொண்டு வருகின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளரும் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன்

15

## மகிந்த எங்கே?

கொழும்பு, ஜூலை 08

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியல் அரங்கில் இல்லாதது தொடர்பில் பாராளுமன்றத்தில் பல விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரம் பல முக்கிய சட்டமூலங்களை

15

## இலங்கை சிங்கள பௌத்த நாடென்பதை முல்லைத்தீவு நீதிபதி மறந்துவிடக்கூடாது!

### சரத் வீரசேகர சபையில் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 08

“குருந்தூர் மலையில் இருந்து எம்மை வெளியேற்றிய முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. தொல்பொருள் தொடர்பில் ஆராயும் அதிகாரம் அவருக்கு இல்லை. அத்துடன் இலங்கை சிங்கள

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இந்தியாவுக்கு செல்லும் ஜனாதிபதிக்கு அரசியல் அழுத்தங்களை வழங்குங்கள்

## யாழ். மீனவர் அமைப்புகள் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 08

**இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடியைக் கட்டுப் படுத்துவதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தங் களை வழங்கவேண்டும் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளன உப தலைவர் அந்தோணிப் பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் கோரிக்கை முன்வைத்துள்ளார்.**




யாழ்.மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று இந்தியா செல்லவுள்ளார்.

இவ்வாறு செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர் கதையாகியுள்ள இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை நிறுத்தமாறு இந்தியப் பிரதமருக்கு அழுத்தத்தை பிரயோகிக்கவேண்டும்.

அது மட்டுமல்லாது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக ஜனாதிபதிக்கு அழுத்தத்தை வழங்குவதோடு கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அழுத்தங்களை வழங்கவேண்டும்-என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த நெடுந்தீவு கடற்தொழில் சமாசத்தின் உறுப்பினர் சி.றொபின்சன் குருஸ்,

நெடுந்தீவில் சுமார் 850 மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் அத்து மீறிய இந்தியா ட்றோலர் படகுகளினால் சுமார் 2 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட கடற்தொழில் உபகரணங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

இந்திய ட்றோலர் படகுகளின் அத்துமீறிய செயல்பாடு காரணமாக எமது வளங்கள் பாதிக்கப்படும் நிலையில் இதுவரை 250 முறைப் பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பல குடும்பங்களில் மனைவிமாரின் தாலியை அடகு வைத்து பலர் வலைகளை வாங்கியுள்ள நிலையில் இந்திய ட்றோலர் படகுகளினால் குறித்த வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தெரியப்படுத்தியுள்ள நிலையில் இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது ஆதங்கங்களை இந்திய பிரதமருக்கு பகிரவேண்டும்-என்றார்.

இதேவேளை, வலி. வடக்கு கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் நீகன் கருத்து தெரிவிக்கையில்-

உள்ளூரில் அனுமதியற்ற சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. இதன் காரணமாக சிறிய மீன்கள் பெருமளவு தடை செய்யப்பட்ட வலைகளில் அகப்படுவதனால் அதனை கடலிலோ தரையிலோ வீசி விட்டுச் செல்கிறார்கள். இதன் காரணமாக கடற்றொழிலை நம்பி இருக்கும் பாரம்பரிய மீனவர்கள் கடலில் மீன் இனங்கள் பெருகாத நிலையில் பாதிக்கப்படுகின்றன-என்றார். (அ)

## நைஜீரியருக்கு மரண தண்டனை

கொழும்பு, ஜூலை 08

245 கிராமுக்கு மேல் கொக்கெய்ன் போதைப்பொருளை வைத்திருந்த மற்றும் கடத்திய குற்றத்துக்காக நைஜீரிய நாட்டவர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே இந்த உத்தரவை நேற்று வழங்கினார்.

2016 மே 27ஆம் திகதி இராஜகிரிய பிரதேசத்தில் ஒரு கிலோ 744 கிராம் கொக்கெய்னுடன் நைஜீரிய பிரஜையை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் கைது செய்திருந்தனர்.

பின்னர், அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்து, அதில் இருந்த கொக்கெய்ன் நிகர அளவு 245.19 கிராம் மட்டுமே என்று தெரிவித்தார்.

நீண்ட விசாரணைக்கு பிறகு, தீர்ப்பை அறிவித்த மேல்நீதிமன்ற நீதிபதி, குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது அரசுத் தரப்பு சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதையடுத்து நீதிபதி குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (அ)

## அஸ்வெசும புதிய நிபந்தனைகள் பூர்த்தியாகும் வரை உதவித்தொகைகளை தொடர்ந்தும் வழங்க தீர்மானம்

கொழும்பு, ஜூலை 08

புதிய நிபந்தனைகளை அறிமுகப்படுத்தப்படும் வரை தற்போதுள்ள சிறுநீரக கொடுப்பனவு, ஊனமுற்றோர் கொடுப்பனவு மற்றும் முதியோர் உதவித்தொகைகளை தொடர்ந்தும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மாற்றுத் திறனாளிகள், நலிவடைந்தவர்கள், வறியவர்கள் மற்றும் மிகவும் வறியவர்கள் ஆகிய 04 பிரிவுகளின் கீழ் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகள் வழங்குவதில் எந்த வித மாற்றமும் இல்லை என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அஸ்வெசும திட்டம் தொடர்பில் இதுவரை சுமார் 760,000 மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 ஆயிரம் ஆட்சேபனைகளும் கிடைத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

அஸ்வெசும திட்டத்தில் பதிவு செய்ய முடியாதவர்களுக்கும், புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களுக்கும் வருடாந்த வாய்ப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அதற்கமைவாக ஆகஸ்ட் மாதத்தில் மீண்டும் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் முயற்சிகள், மிகவும் தேவையுடைய மக்களை இலக்காகக் கொண்டு வளங்களை சமமாக விநியோகித்தல் மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்வதாகும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டினார். (அ)

## மன்னாரில் தரைதட்டிய இந்திய கப்பல்



மன்னார், ஜூலை 08

இந்தியாவுக்குச் சொந்தமானது என கருதப்படும் கப்பல் ஒன்று நேற்று மாலை மன்னார் நடுக்குடா கடல் பகுதியில் கரை தட்டி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தலைமன்னார் கடற்பரப்பு ஊடாக கரை தட்டிய கப்பலை கடற்படையினர் மீட்டு நடுக்குடா கடற்கரைப் பகுதிக்கு கொண்டு சென்றனர்.

குறித்த கப்பலை ஏராளமான பொதுமக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (அ)

## இருவர் கைது

மன்னார், ஜூலை 08

மன்னாரில் ஒரு தொகை போலி நாணயத்தாள்களுடன் இரண்டு இளைஞர்கள் நேற்று முன்தினம் மாலை மன்னார் வைத்தியசாலை பிரதான வீதியில் வைத்து விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 500 ரூபாய் போலி நாணயத்தாள்கள் 15, 1,000 ரூபாய் போலி தாள்கள் 12, 5,000 ரூபாய் போலி தாள்கள் 09 மீட்கப்பட்டுள்ளன.

இவர்களிடம் இருந்து 64,500 ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

கைதான சந்தேகநபர்கள் இருவரும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 - 01 - 1960



இறப்பு 22 - 06 - 2023

### நாகலிங்கம் செல்வநாதன்

யாழ். வேலணை 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வநாதன் கடந்த 22-06-2023 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து – நாகமுத்து தம்பதியர், காலஞ்சென்றவர்களான சுப்பையா – இராசம்மா தம்பதியரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நாகலிங்கம் – திலகவதி தம்பதியரின் பாசமிகு மகனும், வதனியின் பாசமிகு கணவரும், வானுஜா, தனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகநாதன்(சுவிஸ்), ஆனந்தவதனி (பிரித்தானியா), கணநாதன்(பிரித்தானியா), குகநாதன்(பிரித்தானியா), குலநாதன்(பிரித்தானியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராணி, சிவபாலன், தனுசியா, சர்மிளா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹரிந்திரன், கிரந்திரன் ஆகியோரின் அன்பு மாமாவும், திஷாந்தி, செந்தூரி, கண்ணன், நிருஷா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அக்சயா, பிரிதிகா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (10.07.2023) திங்கட்கிழமை காலை 10.00 முதல் 1.00 வரை பிரித்தானியாவில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**திலகநாதன்**
(சகோதரன் – சுவிஸ்)

ஈழநாடு
Eelanadu
08.07.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மக்களை முட்டாளாக்குவதை நிறுத்துங்கள்

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டுமென்று இப்போதும் விவாதிக்கப்படுகின்றது. புதிதாக வரைவுகளை தயாரிப்பது தொடர்பில் ஆலோசிக்கப்படுகின்றது. புலம்பெயர் சூழலிலுள்ளவர்கள் இவ்வாறான முயற்சிகளுக்கு நிதியளிக்கின்றனர். உண்மையில், இது தொடர்பில் இனியும் விவாதிப்பதற்கு ஏதாவது விடயங்கள் இருக்கின்றனவா?

ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பில் 74 வருடகால அனுபவமுண்டு. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வென்று கூறப்பட்டு - பின்னர் பிரிந்து செல்வதே ஒரேயொரு வழியென்று விவாதிக்கப்பட்டு - பின்னர், மீண்டும் பிளவுபடாத இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு என்னும் அடிப்படையில் விவாதிக்கப்படுகின்றது. இந்தக் காலத்தில் ஏராளமான ஆலோசனைகளும், ஏராளமான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கு பின்னரும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறானதாக அமைய வேண்டுமென்று விவாதிப்பது தமிழ் மக்களை முட்டாள்கள் ஆக்கும் செயலாகும். 'ஈழநாடு' ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டியிருக்கின்றது. தமிழர் அரசியலில் அளவுக்கதிகமான சமையல்காரர்கள் இருப்பதுதான் பிரச்னையானது. டொலர்கள் வைத்திருப்பவர்கள அனைவருமே தமிழ் மக்களின் எஜமானர்கள் என்னும் மோசமான நிலைமையொன்று உருவாகியிருக்கின்றது. இதற்கு நாம் முன்னர் சுட்டிக்காட்டியது போன்று தமிழர் தாயக அரசியலை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் தமிழ் தேசிய அரசியல்வாதிகளே காரணமாவர். அவர்கள் தெளிவான நிலைப்பாடுகளின்றி இருப்பதால்தான் புதிது புதிதாக அரசியல் சமையல்காரர்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றனர்.

களத்திலும் சரி - புலத்திலும் சரி கருத்தொருமித்த நிலைப்பாடுகளோடு கட்சிகளும் அமைப்புகளுமில்லை. அமைப்புக்களாக தங்களை அடையாளப்படுத்துபவர்களில் அநேகர் பெயரளவிலேயே அமைப்புகளாக இருக்கின்றனர். வடக்கு - கிழக்கில் அரசியல் கட்சிகள் எவ்வாறு பலவீனமாக இருக்கின்றனவோ, அதே போன்றுதான், சிவில் சமூக செயல்பாடுகளும் இருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பலமான சிவில் சமூக கட்டமைப்புகள் வடக்கு - கிழக்கில் இல்லை. இந்த நிலையில் எவரிடம் பணம் இருக்கின்றதோ அவர்கள் திடீரென்று தங்களை சிவில் சமூகமாக்கிக் கொள்கின்றனர். தங்களுக்கு நெருக்கமான சிலரை அழைத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டுமென்று ஆலோசனைகளை முன்வைக்கின்றனர். எவ்வாறு முன்னர் அரசுசாரா நிறுவனங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிதிக்கு அமைவாக கூட்டங்களை நடத்தினவோ - அதே போன்றே, இப்போது புலம்பெயர் சூழலிலுள்ள தனிநபர்களின் விருப்பங்களுக்கு அமைவாக - அவர்கள் வழங்கும் நிதிக்கு அமைவாக - அரசியல தீர்வாலோசனை அமர்வுகள் நடைபெறுகின்றன.

புலம்பெயர் சூழலில் அமைப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன - முரண்பட்டு நிற்கின்றன என்பதற்கு, அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலையுடனான சந்திப்பு நல்லதொரு உதாரணம். பிரித்தானிய தமிழர் பேரவை மற்றும் இன்னும் சில அமைப்புகளும் அண்ணாமலையுடனான சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தன. அண்ணாமலை இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவாக முன்வைத்திருந்தார். இது ஒரு புறமென்றால், மறுபுறம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் போன்ற அமைப்புகள் அரசியல் தீர்வுக்கான சர்வஜன வாக்கெடுப்பு என்றவாறு பேசி வருகின்றன. அவர்களின் அழைப்பின் பெயரில் அங்கு சென்றுவரும் சிலர் இங்கு அதனை ஒப்புவிக்கின்றனர். அங்கும் இங்கும சர்வஜன வாக்கெடுப்பு பற்றி கூறுபவர்களுக்கோ உலக அரசியல் தொடர்பில் குறைந்தளவு புரிதல்கூட இல்லை.

ஆனால், மக்களோ - வழமைபோல் எல்லாவற்றினதும் பார்வையாளர்களாக இருக்கின்றனர். மக்கள் பார்வையாளர்களாக இருக்கும் வரையில், இவ்வாறான முட்டாளாக்கும் செயல்பாடுகளும் எவ்வித தடைகளுமின்றி முன்னெடுக்கப்படும். இதில் அரசியலை அறிவுபூர்வமாக நோக்க வேண்டுமென்று வாதிடுவோரின் நிலைமையோ வேதாளதத்துக்கு கதை சொல்ல முயற்சிக்கும், விக்கிரமாதித்தனின் நிலைமை போன்றது. அவர்களும் அரசியலை அறிவுபூர்வமாக முன்வைப்பதற்காக சதா முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், மக்களை முட்டாளக்கும் செயல்பாடுகளை முன்னெடுப்பவர்களோ, பணபலத்தை கொண்டு அறிவை பழித்துக் கொண்டிருக்கின்றனர்.

## இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர் தாயகம் திரும்பினர்!

கொழும்பு, ஜூலை 08

நெடுந்தீவு அருகே கடந்த ஜூன் 19ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 9 கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் நாடு திரும்பினர்.

நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட அவர்கள், நேற்று முன் தினம் காலை விமானம் மூலம் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதனையடுத்து அவர்களை மீன்வளத்துறை அதிகாரிகள் தரை மார்க்கமாக ராமேஸ்வரத்துக்கு அழைத்துச் சென்றனர்.

படகு பழுதடைந்த நிலையில், இலங்கைக் கடற்படையினர் தமது, படகை சரிசெய்து தம்மை திருப்பி அனுப்ப முயற்சித்தபோதிலும், படகில் ஒரு துளை ஏற்பட்டு, அதன் மூலம் படகுக்குள் தண்ணீர் புகுந்ததால், பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்தே அவர்கள் தம்மை இலங்கைக்கு அழைத்துச் சென்றனரென மீளத்திரும்பிய தமிழக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## மற்றுமொரு யானைக்கு தாய்லாந்து மருத்துவ உதவி!

கொழும்பு, ஜூலை 08

இலங்கையில் உள்ள மற்றுமொரு யானைக்கு தாய்லாந்து மருத்துவ உதவி வழங்கவுள்ளது.

கொழும்பில் இருந்து நோய்வாய்ப்பட்ட யானையை விமானத்தில் ஏற்றிச் சென்ற சில நாட்களுக்குப் பிறகு, இலங்கையில் மற்றொரு யானைக்கு மருத்துவ உதவியை வழங்க தாய்லாந்து முன்வந்துள்ளது.

இரண்டாவது யானையும் தாய்லாந்தால் இலங்கைக்கு பரிசாக வழங்கப்பட்ட நிலையில், அதன் உடல்நிலை குறித்தும் கவலை எழுப்பப்பட்டுள்ளது.

தற்போது கண்டியில் உள்ள 'பிரது பா' என்ற யானையை அதன் வயது காரணமாக தாய்லாந்திற்கு கொண்டு செல்ல முடியாது என தாய்லாந்து ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன் விளைவாக, தாய்லாந்து மருத்துவ குழு சில வாரங்களில் இலங்கைக்கு சென்று மருத்துவப் பயிற்சி மற்றும் உதவிகளை வழங்குவதற்கு இலங்கை நிபுணர்களுக்கு உதவவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தாய்லாந்து விமானம் மூலம் 22 ஆண்டுகளாக இலங்கையில் இருந்த 30 வயதுடைய சாக் சுரின் யானை அழைத்து செல்லப்பட்டது.

தாய்லாந்தின் மன்னர் மஹா வஜிரலோங்கோர்ன், நாடு திரும்பிய யானையின் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி அளித்துள்ளார். சாக் சுரின் தற்போது ஒரு மையத்தில் 30 நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளது. (அ)

## அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் மலையக மக்கள் புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 08

அஸ்வெசும எனப்படும் ஆறுதல் நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்தில், மலையக மக்களை உள்ளீர்ப்பதில், அரச ஊழியர்கள் உதாசீனப் போக்குடன் செயற்படுவதாக, முறைப்பாடு கிடைத்துள்ளதென கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த் குமார் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் பிரதமர் தினேஸ் குணவர்தனவுடன் கலந்துரையாடியதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## ரயில் சேவை இன்று ரத்து

கொழும்பு, ஜூலை 08

பேருவளை ரயில் நிலையத்துக்கும் அளுத்கம ரயில் நிலையத்துக்கும் இடையிலான ரயில் பாதை இன்று மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கரையோர மார்க்கத்தின் பேருவளை ரயில் நிலையத்துக்கும் அளுத்கம ரயில் நிலையத்துக்கும் இடையில் உள்ள மஸ்ஸல ரயில் கடவையின் திருத்தப்பணிகள் காரணமாக குறித்த வீதி இன்று காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை மூடப்படவுள்ளது.

இதன்படி, இந்த மார்க்கம் மூடப்படும் காலப்பகுதியில் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு ரயில் திணைக்களம் பொதுமக்களிடம் கோரியுள்ளது. (அ)

## இம்முறை வேள்வி இல்லை!

யாழ்ப்பாணம், ஜூலை 08

பொன்னாலை காட்டு வைரவர் ஆலயத்தில் ஆட்டுக்கடா வெட்டும் வேள்வி இந்த வருடம் நிறுத்தி வைக்கப்படுவதாக அந்த ஆலயத்தின் தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

வரலாற்று சிறப்பு மிக்க பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொன்னாலை காட்டு வைரவர் ஆலய கடா வெட்டு வேள்வியை இன்று சனிக்கிழமை நடத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றதால் கடா வெட்டும் வழிபாட்டை நிறுத்துமாறு பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த வருடம் கடா வெட்டு நிகழ்வு நிறுத்தப்படுவதாக தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பெரியோரின் ஆசி கிட்டும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள் உங்கள் புது முயற்சிகளை ஆதரிப்பார். மதிப்புக் கூடும் நாள்.

**மிதுனம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். மரியாதை கூடும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் பழைய கசப்பான சம்பவங்கள் நினைவுக்கு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கணவன் மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். மேலதிகாரி ஒத்துழைப்பார். நம்பிக்கை பிறக்கும் நாள்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களின்ஆலோசனை ஏற்கப்படும். நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவீர்கள். புது பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும் மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**மகரம்**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். சக ஊழியர்களால் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**
கணவன் மனைவி அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். கவனம் தேவைப்படும்.

# தமிழக அரசின் கொள்கைகளால் மொழி சிறுபான்மையினர் பாதிப்பு

## முறைப்பாடு கிடைத்தது என்கிறது ஆளுநர் மாளிகை

*சென்னை, ஜூலை 08*

தமிழக அரசின் கொள்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக மொழி சிறுபான்மை அமைப்பினர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர் என்று ஆளுநர் மாளிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆளுநர் மாளிகையின் ருவிற்றர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், “ஆளுநர் ரவியை மொழி சிறுபான்மை அமைப்பின் உறுப்பினர்கள் சந்தித்தனர். தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற தென் மாநில மொழிகள் உட்பட வேறு எந்த இந்திய மொழிகளையும் அனுமதிக்க வகை செய்யாத மாநில அரசின் கொள்கைகளால் தங்கள் குழந்தைகளுக்கு தாய்மொழியை கற்பிக்க இயலாத தங்களின் சிரமங்களை விளக்கினர்.

தங்களின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு பற்றியும் ஆளுநரிடம் விளக்கினர். இத்தகைய கொள்கையால் 2.8 கோடிக்கும் அதிகமான மொழி சிறுபான்மையினர் தங்கள் தாய்மொழி மற்றும் கலாசாரத்தை மறந்து விடுகின்றனர் என்று அவர்கள் முறைப்பாடு தெரிவித்தனர். வளமான தமிழ் மொழியை மகிழ்ச்சியுடன் ஏற்கிறோம். ஆனால், தங்கள் தாய்மொழியையும் கற்க அனுமதிக்க வேண்டும் என ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்” -என்றுள்ளது.

(ஐ)

# ஆட்சியைப் பிடிப்பதற்கு எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு

## பா. ஜ. கவின் சுப்பிரமணியன் சுவாமி

*சென்னை, ஜூலை 08*

ஒற்றுமையாகச் செயல்பட்டால் மத்தியில் ஆட்சியைப் பிடிக்க எதிர்க்கட்சிகளுக்கு ஒரு வாய்ப்பு உள்ளது என பா. ஜ. க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கூறினார்.

சென்னையில் இருந்து விமான மூலம் மதுரை வந்த அவர் அங்கு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மணிப்பூரில் நடக்கும் கலவரத்தால் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. பிரதமர் மோடி அமெரிக்கா போவதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். ஆனால், மணிப்பூரை போய் பார்க்கவில்லை. மணிப்பூர் பிரச்னையை பிரதமர் சரி செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாகச் செயல்பட்டால் மோடி ஆட்சியை வீழ்த்தி மத்தியில் ஆட்சியைப் பிடிக்க ஒரு வாய்ப்பு உள்ளது. ஆனாலும், பா. ஜ. கவுக்கு பெரும்பான்மை மக்களின் வாக்குகள் கிடைக்கும்.

பிரதமர் மோடி நல்லது செய்தார் என இங்குள்ள சிலர் கூறுகின்றனர். எதுவும் உண்மை அல்ல. பிரதமர் எதுவும் செய்யவில்லை என தொண்டர்கள் கூறுகின்றனர் - என்றார். (ஐ)

# செந்தில் பாலாஜி வாய் திறந்தால் தி. மு. கவின் ஆட்சிக்கே ஆபத்து!

## எடப்பாடி பழனிசாமி

*சென்னை, ஜூலை 08*

செந்தில்பாலாஜி வாய் திறந்தால் தி. மு. க. ஆட்சிக்கு ஆபத்து என எதிர்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவிலேயே தமிழகம் முதன்மையான மாநிலமாக மாற உழைத்தவர் எம்.ஜி.ஆர். அ. தி. மு. கவில் மட்டும்தான் ஒரு தொண்டன் உச்ச பதவிக்கு வர முடியும்.

அமைச்சர் செந்தில் பாலாஜி மருத்துவமனைக்கு சென்றபோது அமைச்சரவையே சென்றது. செந்தில் பாலாஜி மட்டும் வாய் திறந்தால் - ஸ்டாலின்

இருப்பது கோட்டை அல்ல - எந்த சிறை என்று ப.குமார் சொல்லி விட்டார். நிதி அமைச்சர் 30 ஆயிரம் கோடி சம்பாதித்தாக கூறி விட்டார். செந்தில் பாலாஜி வாய் திறந்தால் இந்த ஆட்சி கோவிந்தா! ஆரோக்கியத்துக்காக அல்ல - ஆட்சியை காப்பாற்றதான் செந்தில் பாலாஜியை பார்த்து கொள்கின்றனர்.

எப்போதும் நீட்டை பற்றி மட்டுமே பேசினார்கள் - இன்னும் நீட்டுக்கு கையெழுத்து போட ஸ்டாலினுக்கு நேரமில்லை போல - என்றார்.

(ஐ)

# இந்து அறநிலையத்துறையின் பொற்காலம் இந்த ஆட்சியே

## முதலமைச்சர் ஸ்டாலின்

*சென்னை, ஜூலை 08*

“இது இந்து சமய அறநிலையத்துறையின் பொற்காலம்” என இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடத்தப்பட்ட திருமண வாழ்வில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

34 இணைகளுக்கு நேற்று திருமணத்தை நடத்தி வைத்த பின்னர் முதலமைச்சர் ஸ்டாலின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாதியின் பெயரால் யாரையும் தள்ளி வைக்கக்கூடாது.



ராஜஸ்தான் மாநிலத்தில் பட்டியலின சமூக மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும் அர்ச்சகராகியுள்ளனர்.

கோயில்களில் எந்த தவறும் நடந்துவிடக்கூடாது என கலைஞர் எப்படி செயல்பட்டோரோ, அதே வழியில் நாமும் செயல்படுகிறோம்.

இந்து சமய அறநிலையத்துறையின் பொற்காலம் இது. ஆண்டுதோறும் கூடுதல் நிதி ஒதுக்கி கோயில்களை சீரமைத்து வருகிறோம். இதுதான் திராவிட மாடல் அரசு. பக்தர்கள் மன நிறைவடைந்துள்ளார்கள். மக்களுக்கு நன்மை செய்யவே கோயில்கள் இருக்கின்றன” என்றார். (ஐ)

ஈழநாடு



# எடுப்பார் கைப்பிள்ளைகள் போன்று இனி எம்மைப் பயன்படுத்தமுடியாது!



## தமிழகத்தில் கூறினார் மனோ கணேசன்

சென்னை, ஜூலை 08

“ஒட்டுமொத்த 40 இலட்சம் இந்திய-தமிழக வம்சாவளி மலையகத் தமிழர்கள் தொடர்பில் இலங்கை அரசு, இந்திய அரசு, பிரிட்டிஷ் அரசு ஆகியவற்றுக்குப் பெரும் தார்மீகப் பொறுப்பும், கடமையும் இருக்கின்றன. இந்த அரசுகள் தமது தேசிய சொந்த நலன்களுக்காக இனியும் நம்மை எடுப்பார் கைப்பிள்ளைகளாகப் பயன்படுத்தவிட முடியாது.”

-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியைக் கௌரவ தலைவராகக் கொண்டு தமிழ்நாட்டில் இலங்கை-தமிழக மலையகத் தமிழர் தோழமை இயக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தமிழ்நாடு - திருச்சியில் கடந்த 05 ஆம் திகதி நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் மனோ கணேசன் எம்.பி. உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இது ஒரு வரலாற்று முகியத்துவம் மிக்க நாள். இலங்கையில் வாழும் இந்திய-தமிழக வம்சாவளி மலையகத் தமிழரும், இந்திய-தமிழகத்துக்குத் தாயகம் திரும்பியதாகச் சொல்லப்படும் தமிழகத்தில் வாழும் மலையகத் தமிழரும் அமைப்பு ரீதியாக ஒன்றுபடும் நாள்.

இதன்மூலம் இலங்கையில் வாழும் இந்திய-தமிழக வம்சாவளி மலையகத் தமிழர் எதிர்நோக்கும் பிரச்னைகள், அவர்களது அபிலாஷைகள் தொடர்பில் தமிழகத்தில் புதிய ஒளி பாய்ச்சப்படுகின்றது. அதேபோல் தாயகம் திரும்பிய தாகச் சொல்லப்பட்டு தமிழகத்தில் வாழும் மக்களின் துன்பங்களையும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் ஏறக்குறைய 15 இலட்சம் இந்திய-தமிழக வம்சாவளி மலையகத் தமிழர் வாழ்கின்றார்கள். அதேபோல் தாயகம் திரும்பியதாகச் சொல்லப்படுவோர் தமிழகத்தில் 25 இலட்சம் பேர் வாழ்கின்றார்கள். ஆக மொத்தம் 40 இலட்சம்.

இந்த 25 இலட்சம் பேருடன் சேர்த்து மொத்தம் 40 இலட்சம் பெரும் இலங்கையில் குடியுரிமையுடன் வாழ்ந்திருக்க வேண்டும். வாழ்ந்திருந்தால் இலங்கை நாடாளுமன்றத்தில், நாம் 40 எம்.பிக்கள் இருந்திருப்போம். அதன்மூலம் அரசியல் ரீதியாக நாம் பலம் பெற்று இருந்திருப்போம். எம்மை மீறி எவரும் இலங்கையில் அரசு அமைக்க முடியாது. ஆகவே, எமது உரிமைகள் இன்றைய நிலைமையைப் போல் பறிக்கப்படும் நிலைமை ஒருபோதும் உருவாகி இருக்காது.

ஆனால், 1948 இல் எமது குடியுரிமை பறிக்கப்பட்டது. அப்புறம் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இனவாத அரசை எதிர்த்து அன்றைய நமது தொழிற்சங்க தலைமைகள் மக்களை அணிதிரட்டி போராட்டங்களைச் செய்யத் தவறினார்கள். அப்போது காத்திரமாகச் செயல்பட்டு இலங்கை அரசை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தவறிய இந்திய அரசு, அதன் பின் 1964 இல் எம்மிடம் கலந்து ஆலோசிக்காமலேயே பெருந்தொகையான எமது மக்களை இந்தியாவுக்குத் திருப்பி எடுத்து எம்மைப் பலவீனமடையவும் செய்துவிட்டது.

அன்று அப்படி தாயகம் திரும்பிய மக்களின் வாழ் நிலைமையும் மிகவும் மோசமாகவே இருக்கின்றது. இவர்களுக்குச் சரியான நல்வாழ்வுத் திட்டங்களை அமைத்துத் தர இந்திய அரசு தவறி விட்டத்தையும் இன்று நான் கண்கூடாகக் காண்கின்றேன்.

மறுபுறம் 1948 முதல் 1972 வரை, இலங்கை பிரிட்டிஷ் முடியாட்சியின் கீழ்தான் இருந்தது. அதன்பிறகுதான் இலங்கை குடியரசானது. குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோதும்,1956 சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும், 1964இல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டபோதும், பிரிட்டிஷ் அரசு வாய் திறக்கவில்லை. அன்றைய நமது தொழிற்சங்கத் தலைமைகளும் இந்த அநீதிகளை பிரிட்டிஷ் முடியாட்சிக்கு எடுத்துக் கூறி, நியாயம் கேட்கவும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேல் எமது மூதாதையினரை 1823 முதல் இலங்கைக்குக் கொண்டு சென்று, தமக்கு ஏற்றுமதி வருவாய் தந்த பெருந் தோட்டங்களை அமைத்ததும் பிரிட்டிஷ் முடியாட்சித்தான்.

ஆகவே, இந்த ஒட்டுமொத்த 40 இலட்சம் தமிழர்கள் தொடர்பில் இலங்கை அரசு, இந்திய அரசு, பிரிட்டிஷ் அரசு ஆகியவற்றுக்குப் பெரும் தார்மீகப் பொறுப்பும், கடமையும் இருக்கின்றன. இந்த அரசுகள் தமது தேசிய சொந்த நலன்களுக்காக இனியும் நம்மை எடுப்பார் கைப்பிள்ளைகளாகப் பயன்படுத்த விட முடியாது.

இந்த மூன்று அரசுகளும் முன்வந்து எமக்கான நல்வாழ்வுத் திட்டங்களை அமைத்துத் தர வேண்டும். அதை நாம் இனி தேசிய, சர்வதேச அரங்குகளில் வலியுறுத்தி தீர்வுகளைத் தேடி பெறுவோம். இலங்கை-தமிழக மலையகத் தமிழர் தோழமை இயக்கத்தின் மூலம் இந்த நோக்கங்களை நாம் வலியுறுத்துவோம்”-என்றார்.

(அ)

# மன்னார் உயிலங்குளம் விபத்து மரணம் பணத்துக்காக நடத்தப்பட்ட கொலையா?

மன்னார், ஜூலை 08

மன்னார் உயிலங்குளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் பட்டா ரக வாகனத்தினால் மோதுண்டு இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த விபத்து திட்டமிட்ட கொலை என செய்திகள் வெளியாகி உள்ளது.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர் மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவரும், உயிலங்குளம் கால்நடை வைத்திய அலுவலகத்தில் கடமையாற்றுபவருமான செபமாலை சிறிதரன் (வயது-55) என தெரிய வந்துள்ளது.

மன்னார் உயிலங்குளத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் நொச்சிக்குளம் கிராமத்தில் வைத்து வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

இந்த கொலையை தொடர்ந்து உயிலங்குளம் மற்றும் நொச்சிக்குளத்தைச் சேர்ந்வர்களுக்கிடையில் தொடர்ந்து வாய்த்தர்க்கமும், மோதலும் நடந்து வருகிறது.

இந்த நிலையில் தற்போது இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த நபர் உயிலங்குளம் மற்றும் நொச்சிக்குளத்தை சேர்ந்வர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலின்போது காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது, வைத்தியசாலைக்குள் வைத்து அவரது கழுத்தை வெட்டி கொல்ல முயற்சிக்கப்பட்டது. எனினும், அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

அத்துடன், கடந்த வாரம் குறித்த நபரின் சகோதரரை மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்கள் கத்தியால் குத்தியுள்ளனர்.

இந்த நிலையில் உயிலங்குளத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களின் கொலை தொடர்பாக தொடர்ச்சியாக பல்வேறு பிரச்னைகள் இடம்பெற்றதோடு, கொலை செய்யப்பட்ட இருவரது சகோதரர்கள் மற்றும் உறவுகளினால் உயிலங்குளம் பொலிஸார் தாக்குதல்களுக்கும் உள்ளாகி வந்துள்ளதாக தெரிய வருகிறது.

இந்தப் பின்னணியில், கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் பட்டா ரக வாகனத்தை ஓடி வந்ததாகவும், அதில் இருந்து தப்பியதாகவும் கூறப்படும் இருவர் சரணடைந்த நிலையில் தற்போது உயிலங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் நொச்சிக்குளம் கிராமத்தில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சகோதரர்கள் இருவரின் உறவுகள் சிலர், இந்த கொலையுடன் தொடர்புடைய நொச்சிகுளம் கிராமத்தைச் சேர்ந்தவர்களைப் பழி வாங்கும் நோக்குடன் தொடர்ந்து பல்வேறு சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றனர் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

(அ)

# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் எந்தவித கசிவுகளும் இல்லை!

## உறுதிப்படுத்திய இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூலை 08

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் கசிவு இல்லை என நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவின் வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

சுற்றாடல் அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபை மற்றும் பேராதனை பல்கலைக்கழக புவியியல் திணைக்களம் இணைந்துஅண்மையில் மேற்கொண்ட ஆய்வின் படி, விக்டோரியா நீர்த்தேக்கத்தின் அடிப்பகுதியில் நீர் கசிவை ஏற்படுத்தக்கூடிய விரிசல்கள் எதுவும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், கடந்த சில வருடங்களாக நீர்த்தேக்கத்தின் நீர் இருப்பைக் கணக்கிடும் போது, நீர்த்தேக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட நீரின் அளவு, பெறப்பட்ட நீரின் அளவோடு சமப்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# வழிபாட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பியர்கள் மீது தாக்குதல்

மன்னார், ஜூலை 08

மன்னாரில் ஆலய வழிபாட்டுக்கு உழவு இயந்திரத்தில் பயணித்த குழுவினர் மீது மற்றுமொரு குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் இரு பெண்கள் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உழவு இயந்திரம் பயணித்த போது வீதியில் தடைகளை ஏற்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வெள்ளாங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் - யாழ்ப்பாணம் வீதியில் வெள்ளாங்குளம் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த குழுவினரே இந்த தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

(அ)

# பாதுகாப்புக்காக அனுப்பி வைக்கப்பட்ட பொலிஸ் அதிகாரி என்னை சுடமுயன்றார்

## சுமணரத்ன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 08
இரவு தனது பாதுகாப்புக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் தன்னை கெட்ட வார்த்தைகளால் திட்டி துப்பாக்கியால் சுடத் தயாரானதாகவும் விகாரையில் இருந்த நாய் காரணமாக தான் உயிர் தப்பியதாகவும் மட்டக்களப்பு மங்களாராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் தற்போது கெவிலியாமடு விகாரையில் இருக்கின்றேன். சில மாதங்களுக்கு முன்னர் என்னைச் சுட்டுக்கொல்வதற்காக வந்தனர். இதனால், இரவு நேரங்களில் எனது பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி இரவு 12 மணியளவில் போதி மரத்துக்கு அருகில் உள்ள விளக்கை அணைப்பதற்காகச் சென்றேன். அப்போது அருகில் குறட்டை விடும் சத்தம் கேட்டது.

ஊர்காவற்படை வீரரும் பொலிஸ் சார்ஜன்டும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். நான் சென்றதும் பயந்து எழுந்து, சார்ஜன்ட் கைத்துப்பாக்கியை



எடுத்து என்னைச் சுட முயன்றார்.

நான் ஹாமுதுருவே என்று கூறியதும் என்னை அடையாளம் கண்டுகொண்டார்.

உறக்கத்தில் இருக்கும்போது என்னை எப்படி பாதுகாக்க முடியும் என்று நான் கேட்டேன்.

இதனையடுத்து பொலிஸ் சார்ஜன்ட் தொடர்ந்தும் என்னை கெட்ட வார்த்தைகளால் திட்டி துப்பாக்கியால் சுட முயற்சித்தார்.

அப்போது விகாரையில் வளர்க்கப்படும் நாய் வந்து, பொலிஸ் சார்ஜன்ட் மீது பாய்ந்தது. அவர் நாயுடன் போராடிக்கொண்டிருந்த போது, நான் உடனடியாகச் சென்று விகாரையின் மணியை அடித்தேன். இதன் பின்னர் கிராமவாசிகள் விகாரைக்கு வந்தனர்.

சம்பவம் குறித்து 119 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொலிஸாருக்கு அறிவித்தேன். எதுவும் நடக்கவில்லை.

இதனால், அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட உயர் அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அறிவித்தேன். உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் அதிகாலையில் விகாரைக்கு வந்தார்.

என்னை சுட்டுக்கொல்ல முயற்சித்த பொலிஸ் சார்ஜன்ட் இதற்கு முன்னர் கெவிலியாமடு குளத்திற்கு அருகில் காணி ஒன்றை கைப்பற்றி வேலி அமைத்திருந்தார்.

கிராம மக்கள் அந்த வேலியை கழற்றி அகற்றினர். இதனால் அவர் என் மீது ஆத்திரத்தில் இருந்து வந்துள்ளார்.

என்னை கைது செய்யுமாறு கோரி அவரது மனைவி போராட்டம் நடத்தினார்.

அரச காணியை அனுபவித்து வருவதால், வரும் வருமானத்தில் பாதியை வறிய மக்களுக்கு வழங்குமாறு கூறியதால், இவர்கள் என் மீது கோபத்தில் இருக்கின்றனர்.

என் மீது கோபத்தில் இருக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவரை எனது பாதுகாப்புக்கு அனுப்பி வைத்துள்ளமை ஒரு சூழ்ச்சி-என்றார். (அ)

# நாட்டில் மீண்டும் நெருக்கடியை உருவாக்க ஒரு குழுவினர் முயற்சி

## பிரமித்த பண்டார தென்னக்கோன் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 08
நாட்டுக்குள் மீண்டும் நெருக்கடியை உருவாக்கி நாட்டின் முழு செயற்பாடுகளையும் சீர்குலைக்க ஒரு குழு முயற்சித்து வருவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளது என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த குழுவை சேர்ந்த உறுப்பினர்கள் கடந்த வாரம் கண்டி எல்கடுவ பிரதேசத்தில் உள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றில் கருத்தரங்கொன்றை நடத்தி, எதிர்ப்புப் போராட்டங்களின் போது இராணுவம் மற்றும் பொலிஸாரை எதிர்க்கொள்ளும் விதம் தொடர்பில் பயிற்சி வழங்கியுள்ளனர்.

போராட்டக்காரர்கள், இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு பதிலளிக்கும் விதம், கண்ணீர்ப் புகைக்குண்டு மற்றும் தண்ணீர்த் தாரை தாக்குதல்களை எதிர்கொள்வது தொடர்பாக இதன் போது செயல்முறை பயணிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டத்திற்கு உதவுவதற்காக பல்வேறு அணிகள் எதிர்காலத்தில் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

பாரிய நெருக்கடியை எதிர்கொண்ட பின்னர், நாடு மீண்டும் வழமை நிலைமைக்கு திரும்புவதை தடுப்பதற்கு இந்த அணிகள் முயற்சித்து வருகின்றன.

இந்த குழுக்களின் செயற்பாடுகளை புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் அவதானித்து வருகின்றனர்.


நாட்டின் புலனாய்வுப் பிரிவுகள் பலவீனமாகி, நாட்டின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பல்வேறு தரப்பினர் கூறியபோதிலும் புலனாய்வுப் பிரிவுகள் மிகவும் பலமாக இருக்கின்றன.

நாட்டில் நடந்த ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக புலனாய்வுப் பிரிவினர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

தாக்குதல் சம்பந்தமான புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்த போதிலும் அதற்கு அமைய செயற்படவில்லை.

புலனாய்வுப் பிரிவினரின் பலவீனம் காரணமாக ஈஸ்டர் தாக்குதல் நடைபெறவில்லை- என்றார். (அ)

# பொன்னாலை வரதராஜப்பெருமாள் கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது



யாழ்ப்பாணம், ஜூலை 08
வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது.

ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியார்களான விஸ்வஸ்ரீ க.வி சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிஷேக கரியைகள் இடம்பெற்றன.

நேற்றுக் காலை ஸ்ரீ நாராயணப் பெருமானுக்கு சதுர்வேதங்கள், திருப்பாசுரங்கள் பத்தர்களால் இசைக்கப்பட பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட யாகசாலையில் பூசிக்கப்பட்ட திருக்கும்பங்கள் யானை வாகனம் முன்னே வர சிவாச்சாரியர்கள் தமது சிரசில் சுமந்து வலம் வந்தனர்.

இந்நிலையில் ஆயிரக்கணக்கான பக்தர்களின் கோவிந்த நாம சங்கீர்த்தனம் ஒலிக்க பிரதான வீதியூடாக எடுத்துவரப்பட்ட திருக்கும்ப நீரினால் ஆலயத்தின் இராஜகோபுரத்தின் பதினொரு கலசங்களுக்கும் குடமுழுக்கு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தின் பரிவார மூர்த்திகளுடைய கலசங்களுக்கு குடமுழுக்கு இடம்பெற்றது.

ஸ்ரீ வரதாஜப் பெருமாள் ஆலயத்தின் ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கு மூலாலயத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் கோவிந்த நாமம் ஒலிக்க குடமுழுக்கு இடம்பெற்றது.

தட்சண கைலாய புராணத்தில் சிறப்பிக்கப்பட்ட இவ்வாலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தில் உள்நாட்டு வெளிநாட்டு பக்தர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையிலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட பொருட்களை மீள வழங்கும் நெதர்லாந்து!

கொழும்பு, ஜூலை 08
டச்சு ஆட்சி காலத்தில் இலங்கையில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்களை மீள வழங்குவதற்கு நெதரலாந்து அரசாங்கம் தயாராகி வருகின்றது.

இதற்கான அறிவிப்பை அந்நாட்டு அரசாங்கம் வெளியிட்டுள்ளதுடன், இலங்கை மற்றும் இந்தோனேசியாவிற்கு வழங்கவுள்ள தொல்பொருட்களின் எண்ணிக்கை 478 என அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்நாட்டின் கலாசாரம் மற்றும் ஊடகம் தொடர்பிலான இராஜாங்க செயலாளர் குணே உஸ்லு கருத்து வெளியிடுகையில்,

காலனித்துவ காலத்தில் நெதர்லாந்திற்கு இந்த கலைப் பொருட்கள் தவறாக கொண்டுவரப்பட்டவை. இவை கொள்ளையடித்து பெறப்பட்டவை.

இந்தோனேசியா மற்றும் இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க நெதர்லாந்து, கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை திருப்பி அனுப்ப தீர்மானித்துள்ளது.

நெதர்லாந்தின் காலனித்துவ காலத்திலிருந்து கலாசார பொருட்களை திரும்பப் பெறுவது தொடர்பான ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது- என்றார்.



இந்த கலைப்பொருட்கள் தற்போது உலக கலாசாரங்களின் தேசிய அருங்காட்சியகம் மற்றும் ரிஜ்க்ஸ் அருங்காட்சியகத்தில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நெதர்லாந்தில் இருந்து வழங்கப்படவுள்ள பெறுமதி மிக்க பொருட்களில் லோம்போக் புதையல் மற்றும் லெவ்கே பீரங்கி இலங்கைக்குச் சொந்தமானவையாகும்.

இந்நிலையில், இலங்கைக்கு உரித்தான உரிமைகளை மாற்றுவது இந்த ஆண்டின் இறுதியில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட லெவ்கே பீரங்கி உள்ளிட்ட பொருட்கள் அம்ஸ்டர்டாமில் உள்ள ரிஜ்க்ஸ் மியூசியத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த பீரங்கி கண்டி மன்னருக்கு சொந்தமானதுடன் இது 1765 இல் டச்சு கிழக்கிந்திய கம்பனி வீரர்களால் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. (அ)

# அண்ணனை கத்தியால் குத்தி கொலை செய்த தம்பி!

கொழும்பு, ஜூலை
திம்புலாகலை பெலெட்டியாவ கிராமத்தில் நேற்றிரவு இரண்டு சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட சண்டையில் இளைய சகோதரர் மூத்த சகோதரரை கத்தியால் குத்தி கொலை செய்துள்ளதாக மன்னம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புலாகலை பெலெட்டியாவ கிராமத்தைச் சேர்ந்த 28 வயதான பீ.ஜீ.அமில பிரபாத் பிரேமரத்ன என்ற இளைஞனே கொல்லப்பட்டுள்ளார்.

கொலை தொடர்பான அவரது 24 வயதான இளைய சகோதரரை பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

சந்தேக நபர் நேற்று பொலனறுவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளார்.

மூத்த சகோதரர் அடிக்கடி மதுபோதையில் வீட்டுக்கு வந்து பெற்றோரை திட்டி தொந்தரவு கொடுப்பதால், பொறுத்து கொள்ள முடியாது இளைய சகோதரன், கத்தியால் குத்தி மூத்த சகோதரனை கொலை செய்துள்ளதாக மன்னம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இளைய சகோதரன் பாக்கு வெட்டிக்கொண்டிருந்தபோது வீட்டுக்கு எதிரில் இந்த கொலை சம்பவம் நடந்துள்ளது. (அ)

# வடக்கிலே சீனி ஆலை இனிப்பு தடவிய விஷம்!

## ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 08

**வவுனியாவில் அந்நிய முதலீட்டுடன் பாரிய சீனித் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கும், அதற்குரிய பாரிய கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்கும் அமைச்சரவை அண்மையில் அவசரம் அவசரமாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அத்தோடு, தொழிற்சாலையின் அமைவிடத்துக் கெனவும் கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்கெனவும் முதற்கட்டமாக 74,100 ஏக்கர்கள் அளவு காணியை விடுவிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தை முன்னெடுத்துள்ள தரப்பு, இது போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கென வாராது வந்த வரப்பிரசாதம் என்று இனிப்பாய்ச்சிலாகித்து வருகிறது. ஆனால், இதன் உண்மைகள் மிகவும் கசப்பானவை. வடக்கில் சீனித்தொழிற்சாலை இனிப்புத் தடவியவிஷம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.**

வவுனியாவில் சீனித் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பாகத் தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் பொ.ஐங்கரநேசன் நேற்று நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அபிவிருத்தித் திட்டமொன்றை முன்னெடுக்கும் போது திட்டத்தின் பொருத்தப்பாட்டை அறிந்து கொள்ள நீர் அடிச்சுவடு **water foot print** என்ற நீர்த் தேவையே சூழலியற் குறிகாட்டியாக முதலில் கவனத்தில் கொள்ளப்படுகிறது. கரும்பினதும் சீனியினதும் நீர் அடிச்சுவடு மிகவும் உயர்வானது. ஒரு கிலோ கரும்பை உற்பத்தி செய்வதற்கு 210 லீற்றர் தண்ணீரும் ஒரு கிலோ சுத்திகரிக்கப்பட்ட சீனியை உற்பத்தி செய்வற்கு 1780 லீற்றர் தண்ணீரும் தேவைப்படுகிறது.

கரும்பு வருடம் முழுவதும் நீர்பாய்ச்ச வேண்டிய ஒரு பல்லாண்டுப் பயிருமாகும். இவற்றின் அடிப்படையில் பேராறுகள் எதுவுமே இல்லாத வறண்ட வலயமான வடக்கில் பெருமளவு நீரை விழுங்கும் சீனி உற்பத்தியை முன்னெடுப்பது பேராபத்தாகும். நீர்ச் சமநிலையைக் குழப்பி அத்தியாவசிய உணவுப் பயிர்களின் உற்பத்தியிலும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். ஈற்றில் அம்மண்ணைப் பாலையாக்கியும் விடும்.

கரும்பு மிக அதிகளவில் இரசாயன உரங்களையும், பீடைகொல்லிகளை கொல்லி நஞ்சுகளையும் வேண்டிநிற்கும் ஒருபயிர். தொடர்ச்சியாக விவசாய இரசாயனங்களால் குளிப்பாட்டப்படும் மண்ணில் நுண்ணங்கிகள் அழிந்து தொடர்ந்து பயிரிட முடியாதவாறு மண் மலடாகிவிடுகிறது. கந்தளாய்ச் சீனித்தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டிருப்பதற்குக் கரும்பில் இருந்து இனிமேலும் அதிக விளைச்சலைப் பெறமுடியாத அளவுக்கு நிலம்தரம் இழந்ததும் ஒருகாரணம்.

விவசாய இரசாயனங்கள் நீரோடு கலந்து குடி நீரையும் மாசடையச் செய்கிறது. வவுனியா ஏற்கனவே சிறுநீரக நோய்களின் ஆபத்து அதிகமாகவுள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. விவசாய இரசாயனங்கள் கலந்து குடிதண்ணீரை அருந்தியதால் ஏராளமானோர் சிறுநீரகங்கள் செயலிழந்து அவதிப்படுகின்றனர். இந்நிலையில் கரும்புச் செய்கை வவுனியாவின் நிலத்தினதும் மக்களினதும் ஆரோக்கியத்துக்குப் பெருங்கேடாகவே முடியும்.

கரும்புச் செய்கைக்கும் சீனித் தொழிற்சாலைக்கும் ஒதுக்கப்பட்ட காணியின் அளவு வவுனியாவின் மொத்தப் பரப்பில் ஆறு விழுக்காடுக்கும் அதிகம். இந்தப் பாரிய இடத்தைக்காடுகளை அழித்தே பெறமுடியும். மக்கள் போரினால் இடம் பெயர்ந்ததன் காரணமாகக் கைவிடப்பட்ட மேயிச்சல் தரைகளையெல்லாம் அங்கு மரங்கள் வளர்ந்ததைக் காரணங்காட்டிக் காடுகள் என எல்லைகள் போட்டவன விலங்குத் திணைக்களம் இப்போது அதேகாடுகளை கரும்புச் செய்கைக்கு விடுவிப்பதற்கு இணங்கியுள்ளது.

காலநிலை மாற்றங்களால் பாதிக்கப்படப் போகும் நாடுகளது பட்டியலில் இலங்கையும் அடங்கியுள்ள நிலையில் அதனைக்கருத்திற் கொள்ளாது காடுகளை அழித்து சீனித் தொழிற்சாலையை அமைப்பது குருட்டுத்தனமான முடிவாகும். இது தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபிவிருத்தி என்ற பெயரால் நிரந்தரமாகவே கையகப்படுத்தும் ஒரு தந்திரமுமாகும்.

சீனித்தொழிற்சாலை சிங்களக் குடியேற்றத்துக்கும் வித்திடும் என்ற சந்தேகமும் உள்ளது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம் விவசாயத்தை மேம்படுத்தல் என்று சொல்லப்பட்ட போதும் அதன் உள்ளார்ந்த நோக்கம் சிங்களக் குடியேற்றமாகும். அதுவும், குடியேற்றப்படும் இடத்தின் இன வகிதாசாரப்படி இல்லாமல் இலங்கையின் இன விகிதாசாரத்தின்படியே குடியேற்றங்களை மேற்கொள்வது மகாவலி அதிகாரசபையின் எழுதப்படாத அதிகாரம். மகாவலியுடன் இணைக்கப்பட்ட கந்தளாய்க் குளத்தைமையப்படுத்தி நிகழ்ந்த பயிர்ச்செய்கையே தமிழ் நிலமான கந்தளாயை இன்று முற்று முழுதாக சிங்களவர்களின் நிலமாக்கியது.

வவுனியாவிலும் கரும்புக்கு நீர்பாய்ச்சுகிறோம் என்று சொல்லி வவுனியாவின் குளங்களோடு மகாவலியைத் தொடுத்து நிலங்களை மகாவலி அதிகார சபை தன்வசமாக்கலாம். மகாவலியில் நீர்வரத்து இருக்கிறதோ இல்லையோ இதனூடாகச் சிங்களக் குடியேற்றம் வருவதற்கான வாய்ப்பு மிக அதிகமாகவே உள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட எம்மக்களின் வாழ்வை மேம்படுத்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது அவசியம். ஆனால், வடக்கின் மண்ணுக்கும் மக்களுக்கும் பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்கள் எத்தனையோ இருக்கும் போது எவ்விதத்திலும் பொருந்தாத சீனித் தொழிற்சாலையை வரவேற்பது அறிவுடையோரினதோ, தமிழ்த் தேசியப் பற்றாளர்களினதோ செயலாக இருக்காது.

நீண்ட நெடிய வலிமிகுந்த தேசியவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த இனம் நாம். இப்போராட்டம் எதிர்கால சந்ததியின் வளமான வாழ்வுக்காக மண்ணிண் வளங்களைக் காப்பாற்றி அவர்களிடம் கையளிப்பதையும் உள்ளடக்கியது தான். மண் மீட்கப்புறப்பட்ட நாம் அம்மண் பாலையாகுவதற்கோ மலடாகுவதற்கோ எதன் பொருட்டும் அனுமதிக்க முடியாது-என்றார்.

(அ)

# கட்டுப்பாட்டை மீறி முட்டை விற்பனை!

கொழும்பு, ஜூலை 08

கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும், உள்ளூர் முட்டைகள் அதிக விலைக்கு விற்பனை செய்வதை நிறுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளை முட்டைக்கு 44 ரூபாவும் சிவப்பு முட்டைக்கு 48 ரூபாவும் கட்டுப்பாட்டு விலையை விதிக்க வர்த்தக அமைச்சு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் வரை சில கடைகளில் முட்டை 60 ரூபாவுக்கும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குறிப்பிட்டுள்ளனர்.

முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை விதித்ததையடுத்து, நுகர்வோர் விவகார அதிகாரசபை தொடர்ச்சியான சோதனைகளை மேற்கொண்டதால், சந்தையில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், மீண்டும் உள்ளூர் சந்தைக்கு முட்டைகளை வெளியிட மொத்த வியாபாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை பேக்கரிகளுக்கு மாத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தையில் மீண்டும் முட்டைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை உள்ளூர் சந்தைக்கு வெளியிட நடவடிக்கை எடுத்தால், உள்ளூர் முட்டைகள் இவ்வளவு அதிக விலைக்கு விற்கப்படாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பல மாதங்களாக கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளமையினால் முட்டையின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கட்டுப்பாட்டு விலையானது அதிகபட்சமாக மூன்று மாதங்களுக்கு நிர்ணயம் செய்யப்படுகின்ற நிலையில், அந்த காலத்தை கடந்து செல்லும் போது கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்ட பொருளின் விலையும் அதிகரிக்கிறது.

எவ்வாறாயினும், தற்போதைய நிலவரங்கள் குறித்து அத தெரண, நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் வினவியதுடன், அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களை தேடி தொடர்ச்சியாக சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளது.

(அ)

# தனிப்பட்ட அரசியல் எதிர்காலம் பற்றி ஜனாதிபதி ரணில் சிந்திக்கவேயில்லை

## கூறுகின்றார் வஜிர அபேவர்தன




கொழும்பு, ஜூலை 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தனிப்பட்ட அரசியல் எதிர்காலம் பற்றி சிந்திக்காது, நாட்டின் இரண்டு மில்லியன் மக்களின் எதிர்காலம் குறித்து சிந்திக்கின்றார் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அத்துடன் வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை மக்களுக்காக கையகப்படுத்திய ரணில் விக்கிரமசிங்க தற்போது உலகிற்கு முன்னுதாரணமாக விளங்கி நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருகின்றார் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பது தொடர்பில் பாரிஸிலும் இங்கிலாந்திலும் உலகிலுள்ள அனைத்து உதவி குழுக்களுடனும் தொடர்ச்சியாக கலந்துரையாடிய ஒவ்வொரு நாடும் தற்போதைய வேலைத்திட்டத்தை பாராட்டியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் இப்படிச் சரிந்த நாட்டை மீட்பதற்கு சட்டங்கள், ஆணைகள், பல்வேறு திருத்தங்கள் அவசியம் எனவும், அதனை உலக நாடுகள் கூட பின்பற்றுவதாகவும், ஆனால் எதிர்க்கட்சிகள் தலைமையிலான சில குழுக்கள் நாட்டு மக்களை விமர்சித்து தவறான பாதைக்கு கொண்டு செல்வதாகவே தெரிகிறது எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்தார். அந்தச் சட்டங்கள் தவறான வழியில் உள்ளன. அவர் புரிந்து கொள்ள வேண்டும்-என்றார்.

(அ)

# எதிர்க்கட்சி தலைவர் பதவியில் 21 ஆண்டுகள் இருக்கமாட்டேன்

கொழும்பு, ஜூலை 08

21 ஆண்டு காலம் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கும் தேவை தமக்கில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

திருடர்களைப் பிடிப்பதற்காகவா அல்லது காப்பாற்றுவதற்காகவா ஜனாதிபதி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சியிடம் கோரிக்கை விடுக்கின்றாரா என எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் ஜனாதிபதியாகப் பதவிக்கு வருவதற்கு உதவுவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். கடந்த 2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணைந்து நான் ஜனாதிபதியாக பதவிக்கு வர அவர் உதவிய விதம் இன்னும் நினைவில் இருக்கின்றது.

அப்படியான உதவிகள் எனக்கு தேவையில்லை. நான் எந்த இடத்திற்குச் செல்லவேண்டும் என்பதை தீர்மானிப்பது அரசியல் உடன்பாடுகள் அல்ல.

நாட்டில் வாழும் 220 லட்சம் மக்களே அதனைத் தீர்மானிப்பார்கள்-என்றார்.

(அ)

# கச்சா எண்ணெய் உற்பத்தியை சொல்லி வைத்து குறைக்கும் சவூதி அரேபியா, ரஷ்யா!



கச்சா எண்ணெய் உற்பத்தியை ஜூலை மாதத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு மில்லியன் பேரல்களாக குறைக்க சவூதி அரேபியா முடிவெடுத்துள்ளது. ஆகஸ்ட் மாதமும் இந்த நடவடிக்கை தொடரும் எனவும் அந்நாட்டு அரசின் எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, ஆகஸ்ட் மாதம் கச்சா எண்ணெய் உற்பத்தி நாளொன்றுக்கு 9 மில்லியன் பேரல்களாக இருக்கும் என்று சவூதியின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான சவூதி பிரஸ் ஏஜென்சி (எஸ்பிஏ) தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், கச்சா எண்ணெய் சந்தையை நிலைப்படுத்தும் நோக்கில் எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பான ஒபெக் பிளசின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, சவூதி அரசு வட்டாரங்களை மேற்கோள்காட்டி எஸ்பிஏ செய்தி வெளியிட்டுள்ளது.

சவூதி அரசின் இந்த முடிவை தொடர்ந்து, ரஷ்யாவும் ஆகஸ்ட் மாதம் கச்சா எண்ணெய் ஏற்றுமதியை நாள் ஒன்றுக்கு ஐந்து லட்சம் பேரல்கள் என்ற அளவுக்கு குறைக்க முடிவெடுத்துள்ளது.

ரஷ்யா மற்றும் சவூதி அரேபியாவின் இந்த முடிவால் சர்வதேச அளவில் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலை அதிகரிக்க கூடும் என்று ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் எச்சரித்துள்ளது.

### புடின் உடன் பேசிய சவூதி இளவரசர்

கச்சா எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை குறைக்கும் சவூதி அரேபியா மற்றும் ரஷ்யாவின் அதிரடி முடிவை அடுத்து, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை 1.6 சதவீதம் உயர்ந்துள்ளது. அதாவது ஒரு பேரல் கச்சா எண்ணெய் தற்போது 76.60 டாலர்கள் வரை விற்கப்படுகிறது.

சவூதி அரேபியாவுக்கு அடுத்து கச்சா எண்ணெய் ஏற்றுமதியில், உலக அளவில் ரஷ்யா இரண்டாம் இடம் வகிக்கிறது. இந்த நிலையில் உக்ரேய்ன் மீது ரஷ்யா போர் தொடுத்ததை அடுத்து, அந்த நாட்டிடம் இருந்து கச்சா எண்ணெய் வர்த்தகத்திற்கு மேற்கத்திய நாடுகள் தடை விதித்துள்ளன.

ஓராண்டுக்கும் மேலாக இந்த தடை நீடித்து வரும் நிலையிலும், ரஷ்யாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இருப்பினும் இந்த ஆண்டு இறுதிக்குள் கச்சா எண்ணெய் உற்பத்தியை நாளொன்றுக்கு 9.5 மில்லியன் பேரல்களாக குறைக்க ரஷ்யா முடிவெடுத்துள்ளது.

இந்த நிலையில் சவூதி இளவரசர் முகமது பின் சல்மான் கடந்த ஜூன் 27 ஆம் தேதி, ரஷ்ய அதிபர் புடினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர் சவூதியும், ரஷ்யாவும் கச்சா எண்ணெய் விலையை அதிகரிக்க தொடர்ந்து முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்தியதாக தெரிகிறது. இவ்விரு தலைவர்களின் இந்தப் பேச்சுவார்த்தையின் எதிரொலியாக கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைப்பது என்ற முடிவை இருநாடுகளும் எடுத்துள்ளன.

ஓராண்டுக்கு முன் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை ஒரு பேரல் 113 டாலராக இருந்து



வந்தது. அந்த நிலையில் சர்வதேச அளவில் நிலவிய பொருளாதார மந்தநிலை மற்றும் எண்ணெய் வள நாடுகள் போதுமான அளவு கச்சா எண்ணெய்யை ஏற்றுமதி செய்தது போன்ற காரணங்களால் இதன் விலை குறைய தொடங்கியது. இத்தகைய சூழலில் தான் எண்ணெய் விலையை ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ரஷ்ய அதிபரிடம் சவூதி இளவர சர் கேட்டு கொண்டுள்ளார்.

ஆனால், "ஒபெக் பிளஸ் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் எண்ணெய் வள நாடுகள் கடந்த மாதம் தங்களின் உற்பத்தியில் 90 சதவீதம் கச்சா எண்ணெய்யை ஏற்றுமதி செய்துள்ளன. ஆனால் ரஷ்யா தனது உற்பத்தியில் 50 சதவீதம் எண்ணெய்யை மட்டுமே ஏற்றுமதி செய்தது" என்று அந்நாட்டின் மிகப்பெரிய எரிபொருள் உற்பத்தி நிறுவனமான நோஸ்நேபிட்டின் தலைவர் இகோர் சேஷின் தெரிவித்துள்ளார்.

### சவூதி , ரஷ்யாவின் முடிவுக்கு பிறகும் எண்ணெய் விலை உயராதது ஏன்?

கச்சா எண்ணெய் விலைக்கு மேற்கத்திய நாடுகள் உச்சவரம்பை நிர்ணயித்துள்ளன. இதையடுத்து ரஷ்யாவில் கடந்த மாதம் உற்பத்தி செய்யப்பட்ட கச்சா எண்ணெய், சர்வதேச சந்தையில் ஒரு பேரல் 55.28 டாலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. இதுவே கடந்த ஆண்டு ஜூன் மாதம் 87.25 டாலர்களுக்கு விற்பனையானது என்று ரஷ்ய நிதி அமைச்சர் திங்கள்கிழமை தெரிவித்திருந்தார்.



ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைக்கும் சவூதியின் முடிவு செப்டம்பர் மாதமும் தொடரக்கூடும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

கச்சா எண்ணெயின் விலையை உயர்த்தும் நோக்கத்துடன் சவூதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டாலும், இதற்கான அடிப்படை காரணங்கள் போதுமானதாக இல்லை என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர். அத்துடன் முதலீட்டு வங்கிகள் கச்சா எண்ணெய் விலை வரும் நாட்களில் குறைய வாய்ப்புள்ளது என்றே மதிப்பிட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான இரண்டாவது காலாண்டில் ஒரு பேரல் கச்சா எண்ணெய்யின் விலை 93.50 டாலர்களாக இருக்கும் என்று ஹெச்.எஸ்.பி.சி வங்கி முன்பு கணித்திருந்தது. ஆனால், அதுவே தற்போது 80 டாலர்களாக இருக்கும் என்று குறைத்து மதிப்பிட்டுள்ளது.

### சவூதி , ரஷ்யா கச்சா எண்ணெய் விலையை உயர்த்த விரும்புவது ஏன்?

இருப்பினும், கச்சா எண்ணெய் உற்பத்தி குறைப்பு என்ற சவூதி அரேபியா மற்றும் ரஷ்யாவின் முடிவால், நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் சர்வதேச எண்ணெய் சந்தை மீண்டும் ஏற்றம் காணும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

போக்குவரத்து தொழில் துறையை சவூதி தன் கையில் வைத்திருந்தாலும், அதற்கான எரிபொருள் தேவையில் நிச்சயமற்ற நிலையே நீடித்து வருகிறது.

இதை கருத்தில் கொண்டு இரண்டாவது முறையாக, கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைக்க வேண்டிய அவசியம் அதற்கு உள்ளது. அத்துடன் பல்வேறு அரசுத் திட்டங்களுக்கு தேவையான நிதியை, கச்சா எண்ணெய் விலையேற்றத்தின் மூலம் பெற சவூதி அரேபிய அரசு விரும்புகிறது.

மறுபுறம், உக்ரேய்ன் மீதான போரின் விளைவாக மேற்கத்திய நாடுகள் விதித்துள்ள தடையால், கச்சா எண்ணெய் ஏற்றுமதியின் மூலம் ரஷ்யாவுக்கு கிடைத்து வந்த வருவாய், கடந்த மே மாதம் 1.4 பில்லியன் டாலர்கள் அளவுக்கு குறைந்துள்ளது. எனவே, கச்சா எண்ணெயின் விலையேற்றத்தின் மூலம் இந்த வருவாயை அதிகரிக்க ரஷ்யாவும் விரும்புகிறது



### சீன கரன்சி மதிப்பில் ரஷ்யாவுக்கு பணம் செலுத்தும் இந்திய எண்ணெய் நிறுவனங்கள்

கடந்த ஆண்டு பிப்ரவரி 24 ஆம் தேதி உக்ரேய்ன் மீது ரஷ்யா போர் தொடுத்ததன் விளைவாக, அந்நாட்டில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன. ரஷ்யாவுக்கு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும் நோக்கில் இந்த தடை விதிக்கப்பட்டது. ஆனால், இந்த தடைக்கெல்லாம் அசராத ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு குறைந்த விலையில் கச்சா எண்ணெய் வழங்கி வருகிறது.

சவூதி அரேபியாவிடம் இருந்து ஒரு பேரல் கச்சா எண்ணெய்யை 86 டாலர்களுக்கு வாங்கி வரும் நிலையில், அதையே ரஷ்யாவிடம் இருந்து 68 டாலர்களுக்கு இந்தியா பெற்று வருகிறது. உக்ரேய்ன் போருக்கு பிறகு ரஷ்யாவிடம் இருந்து இந்தியா இறக்குமதி செய்துவரும் கச்சா எண்ணெய்யின் அளவு புதிய உச்சத்தை தொட்டுள்ளது. இருப்பினும் கச்சா எண்ணெய் வர்த்தகத்திற்கான தொகையை ஆரம்பத்தில் ரஷ்ய நாட்டு கரன்சியில் இந்தியா கொடுத்தது. ஆனால் அதன் மூலம் பொருளாதார ரீதியாக தமக்கு எந்த பலனும் இல்லை என்று ரஷ்யா கருதியது.

அத்துடன் எண்ணெய் இறக்குமதிக்கான தொகையை இந்தியாவிடம் இருந்து டாலர்களில் பெறவும் ரஷ்யா விரும்பவில்லை. இதன் காரணமாக, கச்சா எண்ணெய்க்கான பணத்தை எந்த கரன்சி மதிப்பில் செலுத்துவது என்பதில் இரு நாடுகளும் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை.

இந்த நிலையில் கச்சா எண்ணெய் இறக்குமதிக்கான தொகையை சீன நாட்டு கரன்சியான யுவானில் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் ரஷ்யாவுக்கு வழங்கி வருவதாக ஆதாரங்களை மேற்கோள்காட்டி, ராய்ட்டர்ஸ் நிறுவனம் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

அதில், கச்சா எண்ணெய் வர்த்தகத்துக்கான தொகையை சீன கரன்சியின் மதிப்பில் செலுத்தும் இந்தியாவின் முதல் பொதுத்துறை எண்ணெய் நிறுவனம் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (ஐஓசி) என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஐஓசி உடன் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், நயரா எனர்ஜி, ஹெச்.பி.சி.எல் -மிட்டல் எனர்ஜி லிமிடெட் ஆகிய நிறுவனங்களும் எண்ணெய் இறக்குமதிக்கான தொகையை ரஷ்யாவுக்கு யுவானில் செலுத்தி வருவதாகவும் ராய்ட்டர்ஸ் நிறுவன செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதுதொடர்பாக கருத்து கேட்க ஐஓசி, ரிலையன்ஸ் இன்ட்ஸ்ட்ரீஸ் லிமிடெட் உள்ளிட்ட நிறு



வனங்களை தொடர்பு கொண்டபோது, அந்த நிறுவனங்களின் நிர்வாக தரப்பில் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை என்று ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச எண்ணெய் வர்த்தகத்தில் அமெரிக்க டாலர் முக்கிய பங்கு வகித்து வந்தது. இந்தியாவும் டாலர் மதிப்பில் பணத்தை செலுத்தி தான் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்து வந்தது. ஆனால், டாலர் மற்றும் யூரோ கரன்சிகளில் வர்த்தகம் மேற்கொள்ள ரஷ்யாவுக்கு சர்வதேச அளவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அந்த நாட்டின் நிதி அமைப்பில் சீனாவின் கரன்சியான யுவான் தற்போது முக்கிய பங்கு வகித்து வருகிறது.

### ரஷ்யாவின் முடிவால் இந்தியாவுக்கு என்ன பாதிப்பு ?

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா தள்ளுபடி விலையில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருகிறது. இதன் அளவு கடந்த மாதம் (ஜூன்) உச்சத்தை தொட்டது. ஆனால் இதுவே இந்த மாதம் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் புற்றுநோய்க்கான மருந்து தட்டுப்பாடு:
# பள்ளி மாணவியை பலி வாங்கிய பொருளாதார நெருக்கடி

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையில் கடந்த ஓராண்டுக்கு முன்னர் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தால் இன்றும் மக்கள் பல்வேறு விதமான துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

நாட்டிலுள்ள நோயாளிகள் பெரும்பாலும் இவ்வாறான நெருக்கடிகளைச் சந்தித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கை, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் ஓரளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும், அதன் தாக்கம் இன்றும் மக்களைப் பாதித்து வருகின்றது.

இந்த விஷயம் தொடர்பாக ஆராய்வதற்காக இறக்குவானை - பாலம் கோட்டை பகுதிக்குச் சென்றோம்.

இரத்தினபுரி மாவட்டம் இறக்குவானை பகுதியில் பெருமளவு பெருந்தோட்ட மலையக தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவ்வாறான பெருந்தோட்ட பகுதியே இறக்கு வானை - பாலம் கோட்டை பகுதி.

பாலம் கோட்டை பகுதியிலுள்ள வரிசைக் குடியிருப்பு ஒன்றில் வாழ்ந்து வருகின்றார், புஷ்பலதா.

புஷ்பலதா, அவரது கணவர் இருவருமே கூலித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள்.

அவர்களது பிள்ளைகள் இறக்குவானை பரியோவான் தமிழ் தேசிய கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றனர்.

இவர்களுடைய இரண்டாவது மகளான டில்ஷா டில்ரூஷி, 10ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

டில்ஷா டில்ரூக்ஷி கடந்த சில மாதங்களாகவே புற்று நோயால் பாதிக்கப்பட்டு, மஹரகம புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

டில்ஷா டில்ரூக்ஷியை தேடி அவரது வீட்டிற்குச் சென்ற வேளையில் அவரது தாயும், சகோதரியும் மாத்திரமே வீட்டில் இருந்தார்கள்.

தனது கணவர், நோயால் பாதிக்கப்பட்டுள்ள டில்ஷா டில்ரூக்ஷியுடன், மஹரகம புற்றுநோய் மருத்துவமனையில் தங்கியுள்ளதாக அவரது மனைவி புஷ்பலதா தெரிவித்தார்.

தனது மகள் எதிர்நோக்கியுள்ள நிலைமை குறித்து புஷ்பலதா தெளிவுபடுத்தினார்.

'மகளுக்கு ரத்தப் புற்றுநோய் எனச் சொல்லியிருக்காங்க. தலை சுற்றல், வாந்தி, மயக்கம் காரணமாக நாங்கள் மகளை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம். இறக்குவானையில் இருந்து கஹவத்திற்கு அனுப்பினார்கள்.

அங்கிருந்து இரத்தினபுரி அனுப்பினார்கள். அங்கிருந்து மஹரகமவிலுள்ள புற்றுநோய் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள்.

மஹரகமவிற்கு எதற்கு அனுப்புகின்றார்கள் என்று முதலில் எங்களுக்குத் தெரியாது. பிறகு அங்குதான் அவளுக்கு புற்றுநோய் எனச் சொன்னார்கள்.

நாங்கள் ரொம்பவே கஷ்டப்படுகின்றோம். எங்கள் குடும்பமே மிகவும் கஷ்டப்படுகின்றது," என்று டில்ஷா டில்ரூஷியின் தாய் புஷ்பலதா தெரிவித்தார்.

**வாழ்வாதாரத்தை பாதித்த புற்றுநோய்**

மலையகப் பகுதிகளில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர், தினசரி சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டே தங்களது வாழ்வைக் கொண்டு செல்கின்றனர்.

தேயிலை தோட்டம், ரப்பர் தோட்டம், மரக்கறி செய்கை, கூலித் தொழில் போன்ற தினசரி சம்பளத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களில்தான் இந்த மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

புஷ்பலதாவும் அவரது கணவரும்கூட இத்தகைய நாளாந்த சம்பளம் அடிப்படையிலான கூலித் தொழிலையே தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தனர்.

இருந்தும், தற்போது தனது மகள் நோய்வாய்ப்பட்டதைத் தொடர்ந்து, கணவர் முழு நேரமும் மகளுடன் இருந்து அவரை கவனித்துக் கொள்வதாக புஷ்பலதா தெரிவிக்கிறார்.

மேலும், இருவரில் ஒருவரது தினசரி வருமானம் இதன்மூலம் நின்றுபோனதால், வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

"எங்களுக்கு இரண்டு பிள்ளைகள். எங்கள் குடும்பத்தில் நாங்கள் நான்கு பேரும் நண்பர்களாகவே இருந்தோம். அப்பா, பிள்ளைகள் என்று இருந்ததில்லை. பிள்ளைகள் மீது அவ்வளவு பாசமாக இருந்தோம்.

கடவுள் இவ்வளவு பெரிய ஒரு சோதனையைக் கொடுத்துவிட்டார். நாங்கள் யாருக்கும் கடுகளவேனும் கெட்டது நினைத்தது இல்லை. இதிலிருந்து எப்போது மீண்டு வருவோம் எனத் தெரியவில்லை," என வருந்துகிறார் புஷ்பலதா.

கூலித் தொழில் செய்துவரும் இருவருக்கும் ஒரு நாள் சம்பளமாக 1000 ரூபா முதல் 1,200 ரூபா வரை கிடைக்கும். இருவருக்குமாக சேர்த்து 2000 முதல் 2,400 ரூபா வரை கிடைக்கும்.

"மாதத்தில் 25 நாட்கள் வேலை இருக்கும். ஆனால், இப்போது நான் மட்டும் தான் வேலை செய்கின்றேன். அவர் மகளுடன் இருக்கின்றார். மகளை பார்த்துக் கொள்கின்றார்.





மகள் குணமடையும் வரை வேலைக்குச் செல்ல மாட்டேன். மகளை பார்த்துக் கொள்வேன் எனக் கூறிவிட்டார். நான் மட்டும்தான் வேலைக்குச் செல்கிறேன்.

நான்கு மாதம் வரை நாங்கள் இரண்டு பேரும் வேலைக்குச் செல்லவில்லை. பிள்ளையை பார்த்துக்கொண்டோம்," என்று கூறும் புஷ்பலதா ஒருவராவது வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதாலேயே தான் வேலைக்குச் செல்வதாகக் கூறுகிறார்.

**மருந்துக்கடைகளில் கிடைக்காத மருந்துகள்**

இலங்கையில் தற்போதுள்ள மருந்து தட்டுப்பாடு, புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறும் டில்ஷா டில்ரூக்ஷியையும் நேரடியாகவே பாதித்துள்ளது.



"மருத்துவர்கள் மருந்து எழுதிக் கொடுப்பார்கள். ஆனால், அந்த மருந்து மருத்துவமனையில் இருக்காது. அதில் பாதி மருந்துகளை வெளியே மருந்துக் கடைகளில் காசு கொடுத்துத்தான் வாங்குகிறோம்.

சில நேரங்களில் அங்கும் மருந்து இருக்காது. இந்த முறை மகளுக்கு மருந்துக்கடையில் மருந்து கிடைக்கவில்லை. கடைகளிலும் மருந்து இல்லை என்று சொல்கின்றார்கள்.

இந்த மருந்துகளை காசுக் கொடுத்து வாங்கும் அளவுக்கு நாங்கள் வருமானம் பெரும் குடும்பமும் இல்லை. இந்த மருந்துகளை வாங்குவதற்கு அரசாங்கம் உதவி செய்தால் அது பேருதவியாக இருக்கும்," என்று தமது தற்போதைய நிலைமையைக் கூறினார் புஷ்பலதா.

பதினைந்து வயதான டில்ஷா டில்ரூஷி, புற்றுநோயால் பாதிக்கப்பட்டும் மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். இந்தச் சூழ்நிலையில், அதே ஊரைச் சேர்ந்த மற்றொரு சிறுமியான நிரோஷா அண்மையில் புற்றுநோயால் உயிரிழந்துள்ளார்.

மருந்து தட்டுப்பாடே கார்த்திகேயன் நிரோஷாவின் உயிரிழப்பதற்கான காரணம் என அவரது சகோதரியான கார்த்திகேயன் கனகபிரியா தெரிவிக்கிறார்.

இறக்குவானை பரியோவான் தமிழ் தேசிய கல்லூரியில் உயர்நிலை கல்வி பயின்று வந்த மாணவியே கார்த்திகேயன் நிரோஷா.

அவருக்கு 7 வயதாக இருந்தபோது புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, கடும் சிகிச்சைகளுக்குப் பிறகு குணமடைந்து, மீண்டும் வழமையான வாழ்க்கையை வாழ ஆரம்பித்துள்ளார்.

எனினும், அவ்வப்போது மருத்துவ ஆலோசனைகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொண்டுள்ளார் கார்த்திகேயன் நிரோஷா.

இந்நிலையில், கொரோனா தாக்கத்தின்போது மருத்துவர்களிடம் உரிய வகையில் மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருத்துவ சோதனைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையைத் தனது சகோதரி எதிர்நோக்கியதாக கனகபிரியா கூறுகின்றார்.

கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக மருத்துவர்கள் வருகை தந்து பரிசோதனைகளை நடத்தவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து, தனது சகோதரி மீண்டும் புற்று நோய் தாக்கத்திற்கு இலக்காகியதாக அவர் தெரிவிக்கின்றார்.

பொருளாதார நெருக்கடி காரணமாகத் தனது சகோதரியின் சிகிச்சைகளுக்குத் தேவையான மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவியமையால், அவற்றைக் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை தமக்கு ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

"ஏழு வயதில் தங்கைக்கு புற்றுநோய் ஏற்பட்டது. ஐந்து, மருத்துவ சிகிச்சைகளுக்கு பின்னர் அவர் குணமடைந்திருந்தார். ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அவருக்கு புற்றுநோய் ஏற்பட்டது.

கொரோனா காலப்பகுதி என்பதால், மருத்துவர்கள் அதிகமான சிகிச்சைகளை வழங்காததால், நோய் உடம்பு முழுவதும் பரவியது. அந்த காலகட்டத்தில் மருந்துக்கும் தட்டுப்பாடு இருந்தது. அந்த நேரத்தில் பொருளாதாரத்திலும் பாதிக்கப்பட்ட நிலைமைதான் காணப்பட்டது.

அரசு மருத்துவமனைகளிலும் மருந்துகள் இருக்கவில்லை. கடைகளில் வாங்கச் சொல்வார்கள். ஆனால், கடன்களை வாங்கிக்கொண்டு போனாலும்கூட, அங்கும் மருந்து இருக்காது. அந்தச் சந்தர்ப்பத்தில் கிடைத்த மருந்துகள் தரமற்றதாகவும் காணப்பட்டன.

'வாரத்திற்கு 60 ஆயிரம் வரை செலவு செய்தோம்"

இதனாலேயே எங்களுடைய தங்கையை நாங்கள் இழந்துவிட்டோம். இந்த நிலைமை இனியும் வரக்கூடாது. எங்களுடைய தங்கையை இழந்து, நாங்கள் படும் கஷ்டத்தை வேறு யாரும் படக்கூடாது," என கார்த்திகேயன் கனகபிரியா தெரிவிக்கின்றார்.

புற்றுநோய் பாதிப்புகளை எதிர்நோக்கிய தனது தங்கைக்கு வழங்கிய மருந்து வகைகளுக்கான விலைகள் குறித்தும் கார்த்திகேயன் கனகபிரியா தெளிவூட்டினார்.

'சிறிய குப்பிகளில் ஐந்து மில்லி லிட்டர் மருந்துகளைத் தான் வழங்கினார்கள். அந்த மருந்துகள்கூட 1050 ரூபா 1060 ரூபா வரை போகும். மருந்துகளை வாங்கும்போது 30000 வரை ஒரு மருந்துக்கு செலவிடப்படும்.

புற்றுநோயை பொருத்தவரை இரண்டு மருந்துகள் கொடுத்தார்கள். இந்த இரண்டு மருந்துகளை ஒரு வாரத்திற்கு வாங்குவதற்கு மாத்திரம் 60000 ரூபா வரை செலவு செய்ய வேண்டும்," என்கிறார் கனகபிரியா.

அது மட்டும் இல்லாமல் 'போக்குவரத்துச் செலவு உள்ளிட்ட அனைத்தையும் பார்க்கும்போது செலவு இன்னும் அதிகமாகும். பொருளாதார பின்னடைவுக்கு மத்தியிலும் பணத்தைப் புரட்டிக்கொண்டு மருந்துக் கடைக்குப் போனாலும், அங்கு மருந்துகள் இல்லாத நிலைமை காணப்பட்டது.

புற்றுநோய்க்காகத் தயாரிக்கப்பட்ட மருந்துகள் அந்த சந்தர்ப்பத்தில் இல்லாமல் இருந்ததால், தனது தங்கையைப் போல் மருந்துகள் இல்லாமல் நிறைய பேர் உயிரிழந்த சந்தர்ப்பங்களும் இருக்கின்றன," என்று கார்த்திகேயன் கனகபிரியா தெரிவித்தார். (பிபிசி)

# கச்சா எண்ணெய் உற்பத்தியை...

(08ஆம் பக்கம் பார்க்க)

பருவமழை காலத்தில் இந்தியாவில் எரிபொருட்களின் தேவை கணிசமாக குறைவது வழக்கம். இதன் காரண மாக, இந்தியாவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலை யங்கள் தங்களின் சில அலகுகளை (யூனிட்) பராமரிப்பு பணிகளுக்காக மூடுவதும் வழக்கம். இதன் விளைவாக, கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு மட்டுமின்றி, அதை சுத்திகரிக்கவும் இந்தியா, ரஷ்யாவை சார்ந்திருக்க வேண் டிய சூழல் வரும் என்கிறார் கச்சா எண்ணெய் வர்த்தக நிபுணரான விக்டர் கட்டோனா.

அதாவது கச்சா எண்ணெய் ஏற்றுமதியை குறைக்கும் ரஷ்யா வின் முடிவால், அந்த நாட்டி டம் இருந்து குறைந்த விலையில் எண்ணெய் இறக்குமதி செய்து வரும் இந்தியா வுக்கு பாதிப்பு ஏற்படும். அத்துடன், பருவமழை காலத் தில் அதன் சுத்திகரிப்பு ஆலைகளையும் நாட வேண்டிய நிலை உள்ளதால், பொருளாதார ரீதியாக இந்தியாவுக்கு கூடுதல் பாதிப்பு என்கிறார் அவர்.

கடந்த ஜூன் மாதம் மட்டும் ஒரு நாளைக்கு 40.78 லட்சம் பேரல்கள் கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்துள் ளது. இதில் ரஷ்யாவிடம் இருந்து மட்டும் 20.17 லட்சம் பேரல்கள் எண்ணெய் ஒரு நாளைக்கு இறக் குமதி செய்யப்பட்டுள்ளது. அதாவது இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் ரஷ்யாவின் பங்கு 45 சதவீதம். இது மே மாத கச்சா எண்ணெய் வர்த்தகத்துடன் ஒப்பிடும்போது அதிகம்.

**பல மடங்கு உயர்ந்துள்ள கச்சா எண்ணெய் இறக்குமதி**

கடந்த 2021 -22 ஆம் நிதியாண்டில் ரஷ்யாவிடம் இருந்து இந்தியா வெறும் இரண்டு சதவீதம் அளவுக்கு தான் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்து வந்தது. ஆனால் அந்த வர்த்தகத்தின் அளவு 20 சதவீதத்தை தாண்டும் அளவுக்கு, தற்போது பல மடங்கு அதிகரித் துள்ளது. அதாவது இந்தியா பாரம்பரியமாக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வந்த சவூதி அரேபியா, இராக் ஆகிய நாடுகளை பின்னுக்கு தள்ளும் விதத்தில் ரஷ்யா -இந்தியா இடையேயான எண்ணெய் வர்த்தகம் குறுகிய காலத்தில் அதிரடியாக அதிகரித்துள்ளது.

இந்தியா -ரஷ்யா இருதரப்பு வர்த்தகம் 44 பில்லியன் டாலர்கள் என்ற அளவுக்கு உயர்ந்துள்ள போதிலும், இதில் எண்ணெய் வர்த்தகம் தான் பெரும்பங்கு வகிக் கிறது.

அதேநேரம் ரஷ்யாவுடனான இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் மிகவும் குறைவாகவே உள்ளது. ஏப்ரல் 2022 முதல் ஜனவரி 2023 வரையிலான காலகட்டத்தில், ரஷ்யா உடனான இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறை 34.79 பில்லியன் டாலர்களாக உள்ளது. ●

---

பேஸ்புக் ஊடாக அறிமுகமாகி

## 16 வயதுக்கு உட்பட்ட 4 மாணவர்களை துஷ்பிரயோகம் செய்த இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 08

அளுத்கம சுற்றுலாத் தல மொன்றில் 4 பாடசாலை மாண வர்களை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட் டனர் என்று அளுத்கம பொலி ஸார் தெரிவித்தனர்.

நான்கு மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையின் வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் அதிபரால் அளுத்கம பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படை யில் 14, 15 மற்றும் 16 வயது டைய நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நான்கு பாடசாலை மாண வர்களும் சந்தேகநபர்களும் பேஸ்புக் மற்றும் சமூக ஊடகங் கள் மூலம் அறிமுகமாகியுள் ளனர். அண்மைக்காலமாக பல சந்தர்ப்பங்களில் அங்குள்ள சுற்றுலா விடுதிக்கு மாணவர்கள் அழைத்து வரப்பட்டு குடிபோ தையில் கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத் தப்பட்டனர் என்று தெரிவிக் கப்பட்டது. இந்த மாணவர்க ளின் நடத்தையில் ஏற்பட்டுள்ள வித்தியாசம் தொடர்பில் பாட சாலை அதிபர் மற்றும் ஆசிரி யர்கள் கவனம் செலுத்தி மாணவர்களிடம் கேட்டபோது இது தொடர்பான அனைத்து தகவல்களும் தெரியவந்துள் ளது.

அதன்படி, அளுத்கம பிரதேசத்தில் வைத்து 45 மற்றும் 39 வயதுடைய சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்ததுடன், அவர்களது ஸ்மார்ட் போன்களை சோத னையிட்டபோது மாணவர்கள் தொடர்புபட்ட காணொலி காட்சிகள் காணப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து பொலிஸ் காவலில் உள்ள நான்கு மாணவர்களும் சட்ட வைத்திய பரிசோதனைக்காக களுத்துறை போதனா வைத்தி யசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

(அ)

## வீட்டில் மின்சாரம் தாக்கி வயோதிபதித் தம்பதி பலி!

கொழும்பு, ஜூலை 08

மின்சாரம் தாக்கிக் கணவனும் மனைவியும் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு கொழும்பு, கொலன்னாவையில் இடம்பெற்றுள்ளது.

படுக்கை அறையில் பழுதடைந்த மின் விசிறியைத் திருத்தும்போதே இருவரும் மின்சாரம் தாக்கி உயிரிழந் தனர். 71, 68 வயதுடைய வயோதிபதித் தம்பதியினரே இதன்போது உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு வீட்டுப் பணிப்பெண் தகவல் தெரிவித்ததையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் சடலங்களை மீட்டு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

வீட்டுப் பணிப்பெண்ணிடம் வாக்குமூலத்தைப் பெற்ற பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)






# திட்டமிட்டு பரப்பப்படும் போதைப்பொருளை கட்டுப்படுத்த இளைஞர்கள் முன்வரவேண்டும்

## ஹரீஸ் எம்.பி கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 08

**எதிர்காலத்தை சீரழிக்கும் நோக்கில் திட்டமிட்டு மக்கள் மத்தியில் பரப்பப்பட்டுவரும் போதைப் பொருட்களை கட்டுப்படுத்தும் பணியில் இளைஞர்கள் தாமாக முன்வந்து பணியாற்றவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.**



போதையையும், போதைப் பாவனைகளையும் எமது நாட்டில் இல்லாதொழிப்பதனால் எமது எதிர்கால சந்ததியினரை ஒழுக்கமுள்ளவர்களாகவும், அவர்களின் எதிர்காலத்தை சிறந்ததாகவும் உருவாக்கலாம். அதனால் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அதிகாரிகளுடன் எமது இளைஞர்கள் சுயமாக இணைந்துகொண்டு செயல்பட முன்வந்தால் மட்டுமே இதை இல்லாதொழிக்க முடியுமெனவும் அவர் கூறினார்.

அட்டாளைச்சேனை-பாலமுனை பிரதேசத்தில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு பிராந்தியத்தில் போதைப்பொருளை அறிமுகப்படுத்தி இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள், முக்கிய பிரமுகர்கள் இருக்கின்றனர் என்று போதையொழிப்புக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரி தெரிவித்தார். இதைக்கேட்டு நான் அதிர்ச்சிக்குள்ளானேன்.

கிழக்கு பிராந்தியத்தில் கல்வி, ஒழுக்கம் என்பவற்றை சீரழிக்க இந்த மோசமான பழக்கத்தை தமிழ், முஸ்லிம் இளைஞர்களிடம் உருவாக்க நாட்டிலிருந்த சில முக்கிய பிரமுகர்கள் காரணமாக இருந்தார்கள் என்ற அதிர்ச்சியான உண்மையையும் அந்த அதிகாரி எனக்கு தெரிவித்தார்.

இந்த ஆபத்திலிருந்து எமது இளைஞர்களையும், நாளைய தலைமுறையையும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு எம் எல்லோருக்கும் இருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றியமைக்க எங்களால் முடியுமானளவு பல முயற்சிகளை செய்து வருகின்றோம்.

இப்போது இளைஞர்களும் முன்வந்து இதுதொடர்பான விழிப்புணர்வை உருவாக்க வேண்டிய அவசியமுள்ளதையும் உணர்கின்றோம். சிவில் அமைப்புக்கள் இந்த வேலைத் திட்டத்தில் தங்களின் பார்வையை செலுத்த வேண்டியது மிக அவசியமாகிறது-என்றார். (அ)



# 63 பெண்களுக்கு பனையோலை இடியப்பத் தட்டுக்கள் வழங்கல்

அம்பாறை, ஜூலை 08

"கோவிட் -19 தடுப்பு மருந்துடன் வலிமையுடன் முன்னோக்கி" எனும் தொனிப்பொருளில், நிந்தவூர் பிரதேசத்தில் இடியப்பத்தை குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளும் பெண்களுக்கு லயன்ஸ் கழக நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன், பிரதேச தனவந்தர்களின் உதவியுடன் பனையோலையினால் செய்யப்பட்ட இடியப்பத் தட்டுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

நிந்தவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.ரயீஸ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்விவுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் கலந்து கொண்டு இதனை வழங்கினார்.

பிளாஸ்ரிக் பொருட்களை இல்லாது ஒழிக்கும் நோக்கிலும், அதனால் ஏற்படும் பல் வேறு விதமான நோய்களைத் தடுப்பதற்கும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் போசணையான மற்றும் நஞ்சற்ற உணவு திட்டத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு அங்கமாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குற்பட்ட பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 63 குடும்பங்களுக்கு தலா 10 இடியப்பத் தட்டுகள் வீதம் வழங்கி அறிமுகப்படுத்தப்பட்டது.

இடியப்பத்தை குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளும் குறித்த 63 பெண்களின் தொழிலை விரிவுபடுத்தும் நோக்கில் அவர்களுக்கு தலா 3 இலட்சம் ரூபாய் வீதம் வட்டியில்லாக் கடனை வழங்க லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# யானையால் பாதிக்கப்பட்ட 6 பயனாளிகளுக்கு நட்டஈடு

கடந்த 2022 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் காட்டு யானைகளின் தாக்கத்தினால் சொத்தழிவுக்குள்ளாகிய காரைதீவு-10 மற்றும் காரைதீவு-11 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் 06 பயனாளிகளுக்கான நட்டஈட்டுக்கொடுப்பனவுக்கான காசோலைகள் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனினால் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (அ)



# வட்டவானில் இறால் வளர்ப்பு திட்டத்தை நிறுத்துமாறு கோரி மக்கள் போராட்டம்!

மட்டக்களப்பு, ஜூலை 08

வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் வட்டவானில் மேற்கொள்ளப்பட்டு வரும் இறால் வளர்ப்புத் திட்டத்தை நிறுத்தக் கோரி பிரதேச மக்கள் நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாங்கேணி, காயன்கேணி, வட்டவான், ஆலங்குளம் மற்றும் இறாலோடை போன்ற பிரதேச மீனவ அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்திருந்தன.

அப்பகுதி நன்னீர் மீன்பிடிப் போரும் அன்றாடம் ஜீவனோபாய தொழிலை மேற்கொள்ளும் மக்களும் இறால் வளர்ப்புத் திட்டத்வஹால் பாதிக்கப்படுவதாகவும் அதனை தடுத்து நிறுத்துமாறு கோரியும் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

காயன்கேணி பழைய பாலத்திலிருந்து ஆரம்பமாகிய பேரணி திருமலை வீதி ஊடாக வட்டவான் இறால் பண்ணைக்குச் சென்று பண்ணை முன் பதாதைகளை ஏந்தியவாறு கோசங்கள் எழுப்பி போராட்டம் நடத்தப்பட்டது.



'அசுத்தப்படுத்தாதே வாவி நீரை அசுத்தப்படுத்தாதே',

'அழிக்காதே அழிக்காதே மீன் வளத்தை அழிக்காதே',

'சுத்தமான காற்றை சுவாசிக்க விடு','மீனவரின் வாழ்வாதாரத்தை அழிக்காதே ' என்பன போன்ற வாசகங்களை எழுதிய பதாதைகளை கையில் ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த இறால் பண்ணையின் அருகில் அமைந்துள்ள வாவி அசுத்தமடைந்து வருவதாகவும் குறித்த இறால் பண்ணையில் இருந்து திறந்து விடப்படும் அசுத்த நீர் ஆற்றில் கலக்கப்படுவதனால் மீன்கள் இறந்து காணப்படுவதுடன் மீன் வளம் அழிந்து போவதினால் தாங்கள் பொருளாதார ரீதியில் பின்நோக்கிப் போவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தாங்கள் யாரிடம் முறையிடுவது என்றும் தெரியாமல் உள்ளதாகவும் இதனை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும், இப் பிரச்னைகளை தீர்க்க நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். (அ)

# மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு, ஜூலை 08

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுவின் இரண்டாம் காலாண்டிற்கான கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது மாவட்டத்தின் சிறுவர்களது உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கான சுபீட்சமான எதிர்காலத்தினைப் பெற்றுக்கொடுப்பதில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் பிரதேச மட்டத்தில் சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், போசாக்கு மற்றும் பாதுகாப்பு, சிறுவர் துஸ்பிரயோகம், சிறுவர் ஊழியம், போதைவஸ்து, வீதியோர யாசகம் மற்றும் வியாபாரம் உட்பட சிறுவர் அச்சுறுத்தல் தொடர்பான பல விடயங்கள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டன. (அ)

# நாராயணன் தேவஸ்தான கும்பாபிஷேகம் ஆரம்பம்

காரைதீவு, ஜூலை 08

இருநூறு வருடங்கள் தொன்மை வாய்ந்த காரைதீவு பூமிதேவி ஸ்ரீதேவி சமேத ஸ்ரீமன் நாராயணன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை கருமாரம்பத் துடன் ஆரம்பமானது.

இன்று சனிக்கிழமை காலை முதல் எண்ணைய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மகா கும்பாபிஷேகம் காலை 9 மணியளவில் கிழக்கின் பிரபல சிவாச்சாரியார் சிவாச்சார்யதிலகம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நடை

# உக்ரைனுக்கு கொத்துக் குண்டுகள் வழங்குவதற்கு அமெரிக்கா முடிவு?

வாஷிங்டன், ஜூலை 08

அமெரிக்காவின் நேசநாடுகள் உட்பட பல உலக நாடுகள் தடை செய்துள்ள ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்குவது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன ஆராய்ந்து வருகின்றார்.

உக்ரைனிடம் வெடிபொருட்கள் மிகவும் குறைவாக காணப்படுவதால் அந்த நாடு பொதுமக்களுக்கு கடும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய கொத்துக் குண்டுகளை கோரியுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக அமெரிக்க ஜனாதிபதியும் அவரின் சகாக்களும் உக்ரைன் யுத்தம் தொடர்பான மிக முக்கியமான கேள்வியுடன் போராடுகின்றனர். ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு மிகவும் அவசிய தேவையாகவுள்ள எறிகணைகள் முழுமையாக தீர்ந்துபோவதற்கு அனுமதிப்பதா அல்லது கொத்துக்குண்டுகளை வழங்குவதா என்பதே இந்த கேள்வி.

இந்த நிலையில், உக்ரைனுக்கு கொத்துக் குண்டுகளை வழங்க பைடன் தீர்மானித்துள்ளார் என்று தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. எனினும், இது உறுதிப்படுத்தப்படவில்லை.

பைடனின் இந்த நடவடிக்கை அவரது நெருங்கிய சகாக்கள் பலரிடமிருந்து அவரை தனிமைப்படுத்தலாம். அமெரிக்காவின் நட்பு நாடுகள் பல கொத்துக்குண்டுகளை பயன்படுத்துவது சேமிப்பது ஏனைய நாடுகளுக்கு வழங்குவதை தடை செய்யும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்கென் உட்பட பைடன் நிர்வாகத்தை சேர்ந்தவர்கள் உக்ரைனுக்கு கொத்துக்குண்டுகளை வழங்குவது குறித்து தயக்கம் கொண்டுள்ளனர். எனினும் இது குறித்து இறுதி முடிவை எடுக்கும் பொறுப்பை அமெரிக்க ஜனாதிபதியிடம் அவர்கள் ஒப்படைத்துள்ளனர் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உக்ரைனுக்கு கொத்துக்குண்டுகளை வழங்கும் முயற்சிகளுக்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களமே பெரும் அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றது. மனிதாபிமான காரணங்களுக்காகவும் அமெரிக்கா தனது நேச நாடுகளின் பாதையிலிருந்து விலகிச்செல்லவேண்டிய நிலையேற்படலாம் என்ற அச்சம் காரணமாகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இதனை எதிர்க்கின்றது.

ஆனால், தற்போது பைடனின் சகாக்கள் கொத்துக்குண்டுகளை வழங்குவதை தவிர வேறு வழியில்லை என கருதுகின்றனர்.

கொத்துக்குண்டுகளை வழங்குமாறு அமெரிக்க ஜனாதிபதி பைடனுக்கு உக்ரைன் ஜனாதிபதி தொடர் அழுத்தங்களை கொடுத்துவருகின்றார்.

கொத்துக்குண்டுகளே பதுங்குழியிலிருந்து போரிடும் ரஷ்ய படையினரை கொலை செய்வதற்கான சிறந்த ஆயுதங்கள் என உக்ரைன் ஜனாதிபதி வாதிட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### கொத்துக் குண்டு

கொத்துக் குண்டுகளை தடை செய்யும் (அயர்லாந்து டப்ளினில் மே 2008இல் நடந்த மாநாடு) ஒப்பந்தத்தில் 94 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன. ஓர் எறிகணையில் சுமார் 2 ஆயிரம் வரையிலான குண்டுகள் காணப்படும். இந்தக் குண்டுகள் வெடிக்கும் போது பெரும் அழிவை ஏற்படுத்த வல்லவை. பொதுமக்களின் பெரும் அழிவை ஏற்படுத்தவல்ல, இந்தக் கொத்துக் குண்டுகள் சிறுவர்களுக்கு மிகவும் அச்சுறுத்தலானவை. வெடிக்காத கொத்துக் குண்டுகளும் மிகவும் ஆபத்தானவை என்பது குறிப்பிடத்தக்கது.

# ருவிற்றருக்கு போட்டியாக த்ரெட்ஸ் செயலி அறிமுகம்

நியூயோர்க், ஜூலை 08

பேஸ்புக், இன்ஸ்ராகிராம் சமூக இணையங்களது தாய் நிறுவனமான மெற்றா (Meta) "த்ரெட்ஸ்"(Threads) என்ற அதன் புதிய சமூகவலை தளத்தின் செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது.

தங்களது புதிய செயலி ருவிற்றரை முந்துவதை நோக்கமாகக் கொண்டது என்று மெற்றா நிறுவனத்தின் உரிமையாளர் மார்க் சூக்கர்பேர்க் தெரிவித்திருக்கிறார். அறிமுகப்படுத்தப்பட்ட அடுத்த நான்கு மணிநேரத்தில் சுமார் 50 இலட்சம் பேர் புதிய செயலியை தரவிறக்கம் செய்து பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்ற தகவலையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

எலான் மஸ்க் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து ருவிற்றர் தளத்தில் அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சில மாற்றங்களால் அதிருப்தி அடைந்துள்ள அதன் பயனாளர்கள் புதிய "த்ரெட்ஸ்" செயலியால் ஈர்க்கப்படலாம் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

இங்கிலாந்து உட்பட நூறு நாடுகளில் 'த்ரெட்ஸ்' சமூகத் தளம் பாவனைக்கு வந்துள்ளது. ஆனால், ஐரோப்பாவில் ஒழுங்கு விதிகள் தொடர்பான கவலைகள் காரணமாக உடனடியாக அதனைப் பயன்படுத்த முடியாதிருக்கும் . (ஐ)

# ஒரே வாரத்தில் மூன்றுமுறை உச்சம் தொட்ட வெப்பநிலை!

நியூயோர்க், ஜூலை 08

உலகின் சராசரி வெப்பநிலை ஒரே வாரத்தில் மூன்றாவது முறையாக புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

உலகின் சராசரி வெப்பநிலையை 16 பாகை செல்சியஸ் என்ற அளவுக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்று சுற்றுச்சூழல் வல்லுநர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், கடந்த ஜூலை 3ஆம் திகதி உலகின் சராசரி வெப்பநிலை 17.01 பாகை செல்சியஸ் என்ற அளவுக்கு அதிகரித்தது. அந்த நாள் உலகின் மிக அதிக வெப்பம் தகித்த நாளாக பதிவானது. ஆனால், ஜூலை 4ஆம் தேதி 17.18 பாகை செல்சியஸ் பதிவானது. தொடர்ந்து ஜூலை 6ஆம் திகதி 17.23 பாகை செல்சியஸ் என்று பதிவானதாக அமெரிக்காவின் மெய்ன்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ராகுலின் முறையீட்டை நிராகரித்து நீதிமன்று

அகமதாபாத், ஜூலை 08

ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட இரு ஆண்டுகள் சிறை தண்டனையை நிறுத்தி வைக்க மறுப்பு தெரிவித்த குஜராத் உயர் நீதிமன்றம், ராகுல் காந்தியின் மேல் முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது.

தேர்தல் பிரசாரத்தின்போது மோடி பெயர் குறித்து அவதூறாக பேசிய வழக்கில் சூரத் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று ராகுல் காந்தியின் கோரிக்கையை குஜராத் உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

இது அடுத்த ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது. (ஐ)



ஈக்குவடோரின் கலாபகோஸ் தீவுகளின் அருகிவரும் கடல் உடும்புகள் ஓய்வெடுக்கின்றன. எல்நினோ காலநிலை தாக்கம் காரணமாக இந்த கடல் உடும்புகள் மிகப்பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன.

## பாகிஸ்தானில் கடும் மழையால் 27 பேர் பலி!

லாகூர், ஜூலை 08

பாகிஸ்தானில் கடும் மழை காரணமாக 2 தினங்களில் 27 பேர் உயிரிழந்தனர்.

பஞ்சாப், பலுகிஸ்தான் மாகாணங்களில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால் லாகூர் உட்பட பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரு மாகாணங்களிலும் 18 பேர் உயிரிழந்தனர். கடந்த 2 தினங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# அணுமின் கழிவை கடலில் கலக்கும் ஜப்பான் அனுமதியளித்தது ஐ. நா.; சீனா கடும் எதிர்ப்பு

ரோக்கியோ, ஜூலை 08

ஜப்பானில் கடந்த 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் மற்றும் சுனாமி தாக்குதலால் புகுஷிமா அணுமின் நிலையம் சேதம் அடைந்தது. கதிர்வீச்சு கசிவு ஏற்பட்டதுடன், பல ரியாக்டர்கள் நிரந்தரமாக சேதமடைந்தன.

இவற்றை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவது சாத்தியமில்லை என்பதால் அணுமின் நிலையம் மூடப்பட்டது. அதேசமயம், அங்குள்ள அணு உலைகளை குளிர்விக்க பயன்படுத்தப்பட்ட தண்ணீரை (கழிவுநீர்) சுத்திகரித்து கடலில் கலக்க ஜப்பான் அரசு முடிவு செய்து அதற்கான அனுமதியை ஐ. நா. சபையின் அணுசக்தி கண்கா




ணிப்பு அமைப்பிடம் கேட்டது.

இதையடுத்து பலகட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டு வந்தன. இதற்கிடையே ஐ. நாவின் அணுசக்தி அமைப்பின் தலைவர் ரபேல் மரியானோ க்ரோசி ஜப்பானுக்கு சென்றார். அவர் சுனாமியால் சிதைந்த புகுஷிமா அணுமின் நிலையத்தை பார்வையிட்டார்.

பின்னர் அவர் கூறும்போது, 'சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை பசிபிக் பெருங்கடலில் கலப்பதற்கான திட்டங்களில் திருப்தி அடைந்தேன்' என்றார்.

இதையடுத்து சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை கடலில் திறந்துவிட ஐ. நா. அனுமதியை ஜப்பான் பெற்றுள்ளது.

இதேவேளை, ஜப்பானின் இத்திட்டத்துக்கு சீனா கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

# மிட்செல் மார்ஷ் அதிரடி சதம் சரிவிலிருந்து மீண்டது ஆஸி.

லீட்ஸ், ஜூலை 08

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் 3ஆவது போட்டியில் மிட்செல் மார்ஷ் அதிரடியாக விளையாடி சதம் அடித்து அவுஸ்திரேலிய அணியை சரிவில் இருந்து மீட்டார்.

லீட்ஸில் நேற்று முன்தினம் தொடங்கிய 3ஆவது டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இதனால் அவுஸ்திரேலியா துடுப்பாட்டத்தைத் தொடங்கியது. அந்த அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக இருந்தது டேவிட் வோர்ணர் 4 ஓட்டங்களில் ஸ்ருவர்ட் பிரொட் வீசிய முதல் ஓவரிலேயே 2ஆவது சிலிப் திசையில் நின்ற ஸாக் கிராவ்லியிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து உஸ்மான் கவாஜா 37 பந்துகளில் 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மார்க் வூட் பந்தில் ஆட்டமிழந்தார். நிதானமாக விளையாடிய மார்னஸ் லபுஷான் 58 பந்துகளில் 21 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிறிஸ் வோக்ஸ் பந்தில் முதல் சிலிப் திசையில் நின்ற ஜோ ரூட்டிடம் பிடிகொடுத்து வெளியேறினார். தனது 100 ஆவது போட்டியில் களமிறங்கிய ஸ்ரீவ் ஸ்மித் 31 பந்துகளில் ஒரு சிக்ஸர், ஒரு பௌண்ட்ரியுடன் 22 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஸ்ருவர்ட் பிரொட் பந்தில் விக்கெட் காப்பாளர் ஜொன்னி பெயர்ஸ்ரோவிடம் பிடிகொடுத்து நடையை கட்டினார்.




85 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்த நிலையில் டிராவிஸ் ஹெட்டுடன் இணைந்த மிற்செல் மார்ஷ், இங்கிலாந்து பந்து வீச்சை கடும் சிதைவுக்கு உட்படுத்தினார். அதிரடியாக விளையாடிய அவர், 100 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 15 பௌண்ட்ரிகளுடன் தனது 3ஆவது சதத்தை விளாசினார். மிட்செல் மார்ஷின் அதிரடியால் அவுஸ்திரேலிய அணியின் ஓட்டம் சீராக உயர்ந்தது.

மட்டையை சுழற்றிய மிட்செல் மார்ஷ் 118 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 17 பௌண்ட்ரிகளுடன் 118 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிறிஸ் வோக்ஸ் பந்தில், 2வது சிலிப் திசையில் நின்ற ஸாக் கிராவ்லியிடம் பிடிகொடுத்து வெளியேறினார். தேநீர் - உணவு இடைவேளையில் அவுஸ்திரேலிய அணி 52.1 ஓவரில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 240 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டிராவிஸ் ஹெட் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தேநீர் உணவு இடைவேளைக்குப் பிறகு ஆட்டத்தை தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி 60.4 ஓவர்களில் 263 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. டிராவிஸ் ஹெட் 39, அலெக்ஸ் கேரி 8, மிட்செல் ஸ்ரார்க் 2, பட் கம்மின்ஸ் 0, டாட் மர்பி 13 ஓட்டங்களில் வெளியேறினர்.

இங்கிலாந்து அணி தரப்பில் மார்க் வூட் 5, கிறிஸ் வோக்ஸ் 3, ஸ்ருவர்ட் பிரொட் 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதையடுத்து இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தொடங்கியது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 68 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

# உலகக் கிண்ணத் தொடர் நெதர்லாந்து அணி தகுதி




புலவாயோ, ஜூலை 08

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடருக்கு கடைசி அணியாக நெதர்லாந்து தகுதி பெற்றுள்ளது.

ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதி இந்தியாவில் தொடங்குகிறது. இதில் மொத்தம் 10 அணிகள் கலந்து கொள்கின்றன. 8 அணிகள் நேரடியாக தகுதி பெற்ற நிலையில் மீதம் உள்ள இரு அணிகளை தெரிவு செய்வதற்காக சிம்பாப்வேயில் தகுதி சுற்று நடத்தப்பட்டு வருகிறது. இதில் இலங்கை அணி லீக் சுற்றில் அனைத்து போட்டிகளிலும், சுப்பர் -6 சுற்றில் இரு போட்டிகளிலும் வெற்றி பெற்று உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றது.

இந்நிலையில், கடைசி அணியாக தற்போது நெதர்லாந்து தகுதி பெற்றது. புலவாயோ நகரில் நேற்று நடைபெற்ற சுப்பர் 6 சுற்று ஆட்டத்தில் நெதர்லாந்து - ஸ்கொட்லாந்து அணிகள் மோதின. இதில் முதலில் பேட் செய்த ஸ்கொட்லாந்து 9 விக்கெட்கள் இழப்புக்கு 277 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக பிரண்டன் மெக்முல்லன் 110 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 11 பௌண்ட்ரிகளுடன் 106 ஓட்டங்கள் விளாசினார். அணித் தலைவர் பெரிங்டன் 64 ஓட்டங்கள் சேர்த்தார். நெதர்லாந்து அணி தரப்பில் பாஸ் டி லீடி 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

278 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 42.5 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 278 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பாஸ் டி லீடி 92 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளுடன் 123 ஓட்டங்கள் விளாசி அணியின் வெற்றிக்கு பெரிய அளவிலான பங்களிப்பை வழங்கினார். விக்ரம்ஜித் சிங் 40, சகீப் சுல்பிகர் 33, ஸ்காட் எட்வர்ட்ஸ் 25 ஓட்டங்கள் சேர்த்தனர்.

இந்த வெற்றியின் மூலம் நெதர்லாந்து அணி உலகக் கிண்ணத் தொடருக்குள் கடைசி அணியாக நுழைந்துள்ளது. உலகக் கிண்ணத் தொடருக்கு நெதர்லாந்து அணி தகுதி பெறுவது இது 2ஆவது முறையாகும்.

(ஐ)

# விம்பிள்டன் ரென்னிஸ் ரைபகினா அடுத்த சுற்றில்



லண்டன், ஜூலை 08

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் லண்டன் நகரில் நடந்து வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆம் சுற்றுப் போட்டி ஒன்றில் 3ஆம் நிலை வீராங்கனையான எலெனா ரைபகினா (கஜகஸ்தான்), அலிஸ் கார்னெட் (பிரான்ஸ்) மோதினர். இதில் நடப்பு சம்பியனான ரைபகினா 6-2, 7-6 (7-2) என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். மற்றொரு போட்டியில் 4ஆம் நிலை வீராங்கனையான ஜெசிகா பெகுலா (அமெரிக்கா) 6-1, 6-4 என்ற நேர்செற் கணக்கில் ஸ்பெயினின் கிறிஸ்ரினா புக்சாவை தோற்கடித்து 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் பிரான்ஸின் கார்சியா 3-6, 6-4, 7-6 (10-6) என்ற செற் கணக்கில் கனடாவின் பெர்னான்டஸை வீழ்த்தினார். மற்ற போட்டிகளில் பென்சிக் (சுவிற்சர்லாந்து), வெக்கிச் (குரோஷியா), லினெட் (போலந்து) பொடாபோவா (ரஷ்யா) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

# ஜொகோவிச் 350ஆவது வெற்றி

லண்டன், ஜூலை 08

விம்பிள்டன் போட்டியில் சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் தனது 2ஆவது சுற்றில் வெற்றி கண்டார். இதன் மூலம் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டிகளில் மொத்தமாக 350 வெற்றிகள் என்ற மைல் கல்லை அவர் எட்டியிருக்கிறார்.

ரென்னிஸ் வரலாற்றில் இதுவரை, சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மட்டுமே இத்தனை கிராண்ட்ஸ்லாம் வெற்றிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் வரிசையில் தற்போது ஜொகோவிச்சும் இணைந்துள்ளார்.

உலகின் 2-ஆம் நிலை வீரரான ஜொகோவிச், ஆடவர் ஒற்றையர் 2ஆவது சுற்றில் அவுஸ்திரேலியாவின் ஜோர்தான் தாம்சனை 6-3, 7-6 (7 - 4), 7-5 என்ற செற்களில் சாய்த்தார். ஜொகோவிச் அடுத்த சுற்றில், சுவிற்சர்லாந்தின் முன்னாள் நட்சத்திர வீரரான ஸ்டான் வாவ்ரிங்காவை சந்திக்கிறார். வாவ்ரிங்கா முந்தைய




சுற்றில் 6-3, 4-6, 6-4, 6-2 என்ற செற்களில், 29ஆவது இடத்திலிருந்த ஆர்ஜென்ரீனாவின் தோமஸ் மார்ட்டினை வீழ்த்தினார்.

10ஆம் இடத்திலிருக்கும் அமெரிக்காவின் பிரான்சஸ் டியாஃபோ 7-6 (7-4), 6-3, 6-4 என்ற செற்களில் சீனாவின் வூ யிபிங்கை வெளியேற்றினார். 8ஆம் இடத்திலிருக்கும் இத்தாலியின் ஜொனிக் சின்னர் 7-5, 6-1, 6-2 என ஆர்ஜென்ரீனாவின் டியேகோ ஷ்வார்ட்ஸ்மெனை எளிதாக வீழ்த்தினார்.

இவர்கள் தவிர, போலந்தின் ஹியூபர்ட் ஹர்காக்ஸ், கஜகஸ்தானின் அலெக்ஸாண்டர் பப்லிக், இத்தாலியின் லொரென்ஸோ முசெட்டி, ரஷ்யாவின் இலியா இவாஷ்கா ஆகியோர் தங்களது சுற்றுகளில் வெற்றி பெற்றனர். 22ஆவது இடத்திலிருந்த அமெரிக்காவின் செபஸ்ரியன் கோர்டா அதிர்ச்சித் தோல்வி கண்டார்.

# போதைப்பொருள்கள் தடுப்பு செயல்பாட்டில் அரசு தீவிரம்!

## பிரதமர் தினேஸ் தகவல்

கொழும்பு, ஜூலை 08

**சர்வதேச கடலில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்த இந்தியா வுடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

பாராளுமன்றில் இதுதொடர் பாக நேற்று கருத்து வெளியிட்ட பிரதமர், போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக கடுமை யான சட்டங்களைக் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரமாக முன்னெடுத்து வருகி றது.

இதுதொடர்பாக பல தட வைகள் பாதுகாப்புச் சபையி லும் கலந்தாலோசிக்கப்பட்டது.

சர்வதேச கடல் மார்க்கத்தை கண்காணிக்க இந்தியாவின் ஒத் துழைப்பை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஏனெனில், போதைப்பொ ருள் என்பது இந்தியாவிற்கும் பாரிய அச்சுறுத்தலாகவே இருந்து வருகிறது.

எம்முடன் இந்தியா தகவல்க ளையும் பரிமாறிக் கொண்டு வருகிறது.

பாதுகாப்புத் துறையினர், போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த நவீன கருவிக ளின் ஊடாக தகவல்களை சேக ரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தான், உலகின் இன்று இரண் டாவது மிகப்பெரிய வர்த்தக மாக இருக்கிறது.

இதனைக் கட்டுப்படுத்த எமது பாதுகாப்புத் துறையினர் இறுக்கமான நடவடிக்கைகளை



மேற்கொண்டுள்ளார்கள்.

கல்விக் கூடங்கள் அதிகமா கக் காணப்படும் நகரங்களின், போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமை தொடர்பாக அரசாங்கம் தற்போது அவதா னம் செலுத்தியுள்ளது.

இதற்கு எதிரான கடுமை யான நடவடிக்கைகளை மேற் கொள்ள, சட்டங்களின் திருத்தங் களை மேற்கொள்ள வேண்டும் என்றும் நாம் தீர்மானித்துள் ளோம்-என்றார். (அ)

# ஜெரோம் பெர்னாண்டோ இங்கிலாந்துக்கு பயணம்!

கொழும்பு, ஜூலை 08

மதங்களுக்கு எதிரான சர்ச் சைக்குரிய கருத்துக்களை வெளி யிட்ட போதகர் ஜெரோம் பெர் னாண்டோ சிங்கப்பூரில் இருந்து இங்கிலாந்துக்குச் சென் றுள்ளார் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

சட்டவிரோத பணப்பரி வர்த்தனை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில், அவர் சிங்கப் பூரில் இருந்து இங்கிலாந்துக்கு சென்றுள்ளாரென கூறப்படு கின் றது.

ஜெரோம் பெர்னாண்டோ வின் இன்ஸ்டாகிராம் பக்கத் தில் மத நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்துக்கு செல்வதாக அவர் குறிப்பிட்டுள் ளார். (அ)

# பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் அழுத்தங்களுக்கு இடமளியோம்!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 08

பொலிஸ்மா அதிபர் நியம னத்தில் எவருடைய அழுத்தங்க ளுக்கும் அடிபணியப்போவ தில்லை என பாதுகாப்பு இரா ஜாங்க அமைச்சர் பிரமித பண் டார தென்னக்கோன் தெரிவித் தார்.

ஜனாதிபதி ஊடக மையத் தில் இடம்பெற்ற ஊடக சந்திப் பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பொலிஸ் மா அதிபரை நிய மிக்கும்போது மதம் அல்லது வேறு எந்த அமைப்பினதும் அழுத்தங்களுக்கு அடிபணிய அரசாங்கம் தயாராக இல்லை.

தேசிய பாதுகாப்பின் அடிப் படையில் அரசாங்கம் நடவடிக் கைகளை முன்னெடுத்து வருவ துடன், அடுத்த ஐந்து ஆண்டுக ளுக்கு நாட்டின் பாதுகாப்புக் காக ஒவ்வொரு ஆண்டும் மதிப் பீட்டு அறிக்கை பெறப்படுகி றது.

குறித்த மதிப்பீட்டில் பயங் கரவாதம், தீவிரவாதம், சட்ட விரோத நடவடிக்கைகள் குறித்து விசேட கவனத் செலுத்தப்படும் -என்றார். (அ)

# மலையகக் கல்வித்துறைக்குள் அரசியலை திணிக்கவேண்டாம்

## வேலுகுமார் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 08

மத்திய மாகாணத்தின் கல்வி நிலை பதவிகளில் காணப்படும் முரண்பாடுகளுக்கு அரசாங்கம் சிறந்த தீர்வை பெற்றுக்கொடுக் கவேண்டும். மலையக இளை ஞர்களின் எதிர்கால மூலதனம் கல்வி, ஆகவே அதிலும் ஊழலை திணிக்காதீர்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வலியு றுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

காலத்துக்கு தேவையான வகையில் ஊழல் எதிர்ப்பு சட் டமூலம் சபைக்கு முன்வைக்கப் பட்டுள்ளது. தற்போதைய நாட்டின் பொருளாதார நிலை வங்குரோத்து நிலைக்கு தள்ளப் பட்டது.

அத்தியாவசிய பொருட் களை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந் தார்கள். ஊழல் மோசடி இதன் பின்னணியாக காணப்பட்டது.

நாட்டின் சகல துறைகளி லும் ஊழல் மோசடி காணப்ப டுகிறது.பிறப்பு முதல் இறப்பு வரை சகல நடவடிக்கைகளி லும் இலஞ்ச ஊழல் காணப்படு கிறது.

இலவச கல்வி மற்றும் மருத் துவ துறையிலும் ஊழல் வேறூ ன்றியுள்ளது. ஊழல் இல்லா தொழிக்க வேண்டும் என சர்வ தேச நாணய நிதியம் வலியுறுத் தியுள்ளது.

அதேபோல் ஊழல்வாதிகள் தண்டிக்கப்பட வேண்டும் என சர்வதேச நிறுவனங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின் றன. இயற்றப்படும் சட்டம் சிறந்த முறையில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

மத்திய மாகாணத்தில் கல்வி நிலை கடந்த காலங்களில் அரசி யல்மயப்படுத் தப்பட்டிருந்தது. அரசியல் கட்சிகளின் அழுத்தம் ஊடாக கல்வி நிலை கட்டுப் பட்டிருந்தது.

மத்திய மாகாணத்தில் அதிக தோட்டப் பாடசாலைகள் காணப்படுகின்றன. தோட்டப் பாடசாலைகளின் நலன் தொடர் பில் ஆராய மத்திய மாகாணத் தில் மேலதிக கல்வி பணிப்பா ளர் பதவி ஒன்று காணப்பட் டது. ஆனால் தற்போது அந்த பதவி நீக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் மேல திக கல்விப் பணிப்பாளர்களாக பதவி வகித்தவர்கள் அரசியல் கட்சிகளின் கையாள்களாக செயற்பட்டுள்ளார்கள்.

இதன் காரணமாகவே தற் போது அந்தப் பதவி முழுமை யாக நீக்கப்பட்டுள்ளது. அரச நிர்வாகக் கட்டமைப்பில் மாகாண சபை ஒன்று இல்லாத நிலையில் எவ்வாறு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் என்ற பதவி நிலையை நீக்க முடி யும். இதில் உள்ள அரசியல் என்ன, இனவாதம் என்ன என்று கேள்வி எழுப்ப வேண்டியுள் ளது.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஹட்டன் கல்வி வலயத் தில் உள்ள 133 பாடசாலைக ளில் 115 பாடசாலைகள் தமிழ் மொழி மூலமானவை, நுவரெ லியா கல்வி வலயத்தில் உள்ள 158 பாடசாலைகளில் 123 பாடசாலைகள் தமிழ் மொழி மூலமானவை.

ஹற்றன் கல்வி வலயத்துக்கு ரிய பணிப்பாளர் தொடர்ச்சி யாக மலையக சமூகத்தில் இருந்து உரிய கல்வித் தகைமை யுடன் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் தற்போது அங்கு உள்ள அரசியல்வாதிகளின் தலையீட் டினால் ஊழல் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டு இன்று நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பிக்கும் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

நுவரெலியா கல்வி வலயத்தில் தமிழர் ஒருவர் பணிப் பாளராக நியமிக்கப்படுவது தொடர்ந்து தடைப்பட்டு வரு கிறது. அதற்கு ஆளும் தரப்பில் உள்ள அரசியல் கட்சியின் செயல்பாடு பிரதானவையாக காணப்படுகிறது. இதனை மாகாண சபைக்கு உரிய விவகா ரம் தொடர்பில் கல்வி இரா ஜாங்க அமைச்சர் புறக்கணிக்க கூடாது. மத்திய மாகாண மேல திக கல்வி பணிப்பாளர் விவகா ரம் மற்றும் நுவரெலியா கல்வி வலய பணிப்பாளர் நியமனம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி சிறந்த தீர்வை பெற் றுக்கொடுக்கவேண்டும். மலை யக இளைஞர்களின் எதிர்கால மூலதனம் கல்வி ஆகவே கல்வி யிலும் ஊழலை திணிக்காதீர் கள்-என்றார். (அ)

# இந்திய கடல் ஊடாக தமது மீனவர்களுக்கு பாதையைக் கேட்கின்றது இலங்கை அரசு!

கொழும்பு, ஜூலை 08

இலங்கை மீனவர்கள் பல நாள் மீன்பிடிக்காக அரபிக்கட லுக்குள் நுழைவதற்கு வசதியாக இந்திய கடல் எல்லைக்குள் கடல்பாதையொன்றை உருவாக்க இராஜதந்திர முயற்சிகளை ஆரம் பித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தற்போது நீர்கொழும்பு, திக் கோவிட்ட, பேருவில, மாத்தறை போன்ற பகுதிகளிலிருந்து கட லுக்குச் செல்லும் இலங்கையின் பல நாள் மீன்பிடிக் கப்பல்கள் மாலைதீவைச் சுற்றி அரேபியக் கடலுக்குச் சென்று வருகின்றன. இருப்பினும், இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண் டலம் வழியாக சென்றால், அவர் களுக்கு 400 கடல் மைல்கள் பயணத்தைக் குறைக்கலாம்.

எனினும், இந்தியாவின்பி ரத்தியேக பொருளாதார மண் டல எல்லை ஊடாக அரபிக்க டலுக்குச் செல்லும் இலங்கை மீனவர்கள் தற்போது இந்திய கடலோர காவல்படையினரால் கைது செய்யப்படுகிறார்கள்.

பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா மனிதாபிமான உதவிகளை வழங்கியதை அடுத்து இந்தியா-இலங்கை இருதரப்பு உறவுகள் புதிய உச் சத்தை எட்டியுள்ளன. இரு நாடு களுக்கும் இடையிலான நல்லுறவைப் பயன்படுத்தி இந்த புதிய முயற்சியை ஆரம்பிக்க இலங்கை இப்போது திட்டமிட் டுள்ளது.

இலங்கை மீன்பிடி கப்பல்க ளுக்கு பிரத்தியேக பொருளா தார மண்டலம் ஊடாக செல்வ தற்கு இந்தியாவின் அனுமதியை அரசாங்கம் கோருவதாக கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

“ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க இந்த மாத இறுதியில் புது டில்லிக்கு விஜயம் செய்யும் போது இது குறித்து விவாதிக் கப்படும்,” என்றார் டக்ளஸ். (அ)

# இரத்தக் காயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூலை 08

இரத்தக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மாத்தறை, திக்கொடை பிர தேசத்தில் நேற்று அதிகாலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள் ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய கவிந்து பெர் னாண்டோ என்ற நபரே சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டுக்கு முன்வீதியில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள் ளது.

நண்பன் ஒருவரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் மாலை பஸ் ஸில் சென்றிருந்த குறித்த இளை ஞர், நேற்று அதிகாலை வீடு திரும்புவதாகப் பெற்றோரிடம் தெரிவித்திருந்தார் என்று பொலி ஸாரின் ஆரம்பகட்ட விசார ணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், அவர் தனது வீட்டுக்கு முன் வீதியில் இருந்து நேற்று அதிகாலை 3 மணியள வில் இரத்தக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீதி விபத்தில் சிக்கி அவர் உயிரிழந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பது தொடர்பில் பிரேத பரிசோத னையின் பின்னரே தெரியவரும் என்று கூறிய பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ள னர். (அ)

## இலங்கை...

பௌத்த நாடு என்பதை நீதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமை களுக்கு எதிராக நீதிபதிகளும் செயல்படுகிறார்கள்.

ஆகவே, பௌத்த மரபுரிமைகளை பாதுகாக்க சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும்” என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் (திருத்தச்) சட்டமூலம் -இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய நல்லிணக்கத்துக்கும், தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் செயற்பாடுகள் தற்போது தீவிரமடைந்துள்ளன.

இலங்கை சிங்கள பௌத்த நாடு. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2000 வருடகால பழமையான தொல் பொருள் மரபுரிமைகள் பரவலாக காணப்படுகின்றன. குருந்தூர் மலையில் பௌத்த மரபுரிமைகள் உள்ளன.

குருந்தூர் மலைக்கு நாங்கள் அண் மையில் சென்றிருந்தபோது அவ்விடத் துக்கு வருகை தந்திருந்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி நாங்கள் விசாரணைக்கு இடையூறு விளைவிப்பதாக குறிப்பிட்டு எம்மை வெளியேறுமாறு குறிப்பிட் டார்.

அத்துடன் குருந்தூர் விகாரையில் வழிபாட்டில் ஈடுபட வருகை தந்த பௌத்த தேரரையும் வெளியேறுமாறு குறிப்பிட்டார். நீதிபதியின் செயல் பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.

குருந்தூர் மலை விகாரையின் தொல்பொருள் மரபுரிமை தொடர்பில் கேள்வி எழுப்பும் அதிகாரம் இந்த தமிழ் நீதிபதிக்கு கிடையாது.

அத்துடன் குருந்தூர் மலையில் இருந்து வெளியேறுமாறு குறிப்பிடும் அதிகாரமும் அவருக்கு இல்லை. இலங்கை சிங்கள பௌத்த நாடு என் பதை தமிழ் நீதிபதி நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் திட்டமிட்ட வகையில் பௌத்த மரபுரிமைகள் அழிக்கப்படுகின்றன. அதற்கு ஒருசில நீதிபதிகளும் ஆதரவு வழங்குகிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி அரசியலமைப்பின் 9 ஆவது அத்தியாயத்தை முழுமையாக மீறியுள்ளார் என்பதையும் உயரிய சபை ஊடாக குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை அழித்து அதன் மீது திரிசூலம் உட்பட மத அடையாளங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

குருந்தூர் மலையிலும் இவ்வாறான தன்மையே காணப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை பாது காக்க சிங்கள பௌத்த மக்கள் ஒன்றிணையவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்றால் ஏன் பௌத்த மத மரபுரிமைகளை அழித்து அதன் மீது திரிசூலத்தை அமைக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் உள்ள தொல்பொருள் மரபுரிமை களை பாதுகாக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (அ)

## முல்லைத்தீவில்...

கப்பட்ட காணாமல் போனோர் பணிமனை இன்று வரை தனது பணியை செவ்வனே செய்து முடிக்கவில்லை. ஆயினும், ஜெனிவா கூட்டத் தொடர் வருகின்ற காலப் பகுதிகளில் தாமும் வேலை செய்வதாகவும், அவர்களது விவரங்களை பெற்று மக்களுக்கு தாம் பதிலளிப்பதாக காட்டுவதற்காகவும் தமது பணிகளை மும்முரமாக வெளிக்காட்டுகின்றனர்.

நாளையதினம் (இன்று) கிளிநொச்சி மாவட்டத்தில் ஓ.எம்.பி. அலுவலகம் வந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவு களின் குடும்பங்களை அழைத்து அதற்கான பரிகாரம் வழங்கப் போவதாக அறிய முடிகின்றது.

நாம் பல மாவட்டங்களில், பல இடங்களில் மற்றும் பல காலங்களில் ஓ. எம்.பி. பணிமனையை எதிர்த்து நின்றோம். அதாவது மாவட்ட ரீதியாக அவர்கள் எந்தவிதமான செயல்படுக ளையும் செய்யாதவாறு எதிர்த்தோம்.

இன்றும் நாம் ஓ.எம்.பி.அலுவல கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளமாட் டோம். அந்த அலுவலகத்தின் ஊடாக வோ அல்லது இலங்கை அரசாங்கத்தின் ஊடாகவோ தீர்வு கிடைக்கப் போவ தில்லை என்பதால் தான் 38 ஆவது கூட்டத்தொடரில் இருந்து இன்று வரை ஜெனிவாவில் உண்மையான குரலினை பதிவு செய்து வருகின்றோம்.

ஓ.எம்.பி.அலுவலகம் அரசாங்கத்தை காப்பாற்ற முனையாது விலகிக்கொள்ள வேண்டும். அரசாங்கத்துடன் சார்ந்து அரச சம்பளம் வாங்கும் மாவட்ட செயலகமாக இருப்பினும் அல்லது பிரதேச செயலகமாக இருப்பினும் அங்கே பணிபுரிபவர்களால் கூட அந்தப் பதவிகளில் இருப்பதால், எமது உறவு களின் உயிர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்க முடியாமல் உள்ளனர்.

ஆனால், அரசாங்கத்துக்கு சார்பாக வேலை செய்வதற்கு மக்களிடம் வருகின்றனர். மக்களின் பணிகளைச் சரியாக செய்வதில்லை. தமது தேவை களுக்காகச் செல்லும் மக்களை இருக்க வைத்துவிட்டு அவர்கள் தொலைபேசி யுடன் இருப்பார்கள்.

ஆனால், ஓ.எம்.பி. அலுவலகம் என்றவுடன் அங்கு வழங்கப்படும் ஜூஸ ிற்கும், சிற்றுண்டிக்குமாக வேலை செய்வதை கண்டிக்கிறோம்.

முல்லைத்தீவில் அகழப்படும் மனித புதைகுழிகள் எங்கிருந்து வந்தன? யாரால் ஆக்கப்பட்டன? அதனை இல்லாது ஒழிப்பதற்காகத்தான் அகழ்வுப் பணிகளில் அரச படைகளும் இணைந் துள்ளன.

அந்த அகழ்வுகள் நீதியான முறையில் இடம்பெறுதல் வேண்டும். இலட்ச கணக்கில் எமது மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். கையளிக்கப்பட்ட உறவு களுக்கு என்ன நடந்தது என்று கூறமுடி யாது அரசு தவிர்த்து வருவதுடன் அரசாங்கத்தினால் ஜெனிவா மற்றும் உலக நாடுகளின் அழுத்தத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் உள்ளது.

ஆகவே, அரசாங்கம் அழுத்தம் கொடுக்கும் நாடுகளை ஏமாற்றும் நோக்கில் இந்த தடயங்களை அழிக்க லாம். ஆகவே புலம் பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் மட்டுமன்றி மனித நேயத்துடன் உள்ள அனைத்து உலக நாடுகளும் இவை குறித்த உண்மையினை அறிய உதவ வேண்டும்-என்றார். (அ)

## மகிந்த எங்கே...

நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோதிலும், அந்த நிகழ்வுகள் எதி லும் மகிந்த பங்கேற்கவில்லை.

இதனையடுத்து அவருக்கு என்ன நடந்தது என உறுப்பினர்கள் பலர் பலரிடம் கேட்டறிந்தனர் என்று தெரிய வருகிறது.

எவ்வாறாயினும், மகிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக வெளியில் வராதபோதி லும், விஜயராம மாவத்தையில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் பல்வேறு அரசியல் கலந்துரையாடல் களில் ஈடுபட்டு வருகிறார் என்று தெரியவந்துள்ளது. (அ)

## நல்லாட்சி...

தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எமது கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வின் துறைசார்ந்த அமைச்சின் ஆளுகைக் குள் உள்ள விடயத்தை-உண்மைத் தன் மையை விளங்கிக்கொள்ளாது இங்குள்ள ஒரு சில தனது கட்சி முகவர்களின் கருத் துக்களை ஆராயாமல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

அதில் பாரம்பரிய கடற்றொழில் முறைமை பாதிக்கப்படுவதாகவும் சிறு தொழிலாளர்களும் அவர்களது தொழிலை இழக்கும் நிலைமை உருவாகி வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் திட்டமிடலின் பயனாக இன்று பல சிறு தொழில்களில் ஈடுபட் டவர்களில் கணிசமானவர்கள் கடலட் டைப் பண்ணை நடத்தும் நிலைக்கு உயர்ந்துள்ளனர்.

அதேவேளை கடலட்டைப் பண் ணைக்குரிய அனுமதிகள் அது தொடர் பான துறைசார் ஆட்சி நிறுவனங்களி னால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னரே அப்பகுதிச் சங்கங்களின் அங்கீகாரங்களுடன் அப்பகுதி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிந்து கொள்ளவிரும்பின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக அத்தகவல்களை சுயாதீனமாக பெற்றுக்கொள்ள முடியும்

அவர் அதை விடுத்து இவ்வாறான தனது முகவர்களது உண்மைக்கு புறம் பான கருத்துக்களை பிரதிபலிக்க செய்யும் வகையில் முனைவது அவரது மாண்புக்கு இழுக்கை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் இருந்த காலப்பகுதியிலேயே யாழ். அரியாலைப் பகுதியில் கடலட்டை குஞ்சுகள் வளர்ப்பதற்கான அனுமதி சீன நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப் பட்டது.

அந்தக் காலப்பகுதியில் வழங்கப் பட்ட அனுமதிகளுக்கு இன்றைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது அவதூறு சுமத்தவேண்டும் என்ற அரசியல் நோக்கங்களுக்காக கூறப்பட்டவை அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்பது யாவரும் அறிந்ததே - என்றார். (அ-02)

## மருந்துகளின்...

ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

சுகாதாரத் துறையில் எழுந்துள்ள மருந்துகள் கொள்முதல் செயல்முறை குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நிதியமைச்சின் செய லாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத் திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரத்துறையின் பல முக்கிய விடயங்கள் குறித்து இதன்போது விரி வாக கலந்துரையாடப்பட்டதுடன், அடையாளம் காணப்பட்ட பிரச்னை களை உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத் தப்பட்டது.

சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து ஊடகங்களில் வெளியாகும் தகவல்களின் உண்மைத் தன்மை மற்றும் பொய்யான தகவல்கள் தொடர்பில் துரிதமாக கண்டறியுமாறும் இதன்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## அடுத்த வார...

இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு உத்தியோகபூர்வ பய ணத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அண்மையில் நாடு திரும்பியிருந்தார்.

## கடனுக்கு...

இலங்கை, அதன் இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கு, 7.1 பில்லியன் டொலர்களை கடனாக செலுத்த வேண்டியுள்ளது. இதன்படி, 3 பில்லியன் டொலர்களை சீனாவுக்கும், 2.4 பில்லி யன் டொலர்களை பரிஸ் கிளப்புக்கும், 1.6 பில்லியன் டொலர்களை இந்தியா வுக்கும் செலுத்த வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கையின் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

அந்த மறுசீரமைப்பு நிதிவசதி கிடைக்கப்பெற்ற பின்னர், ஒரு குறிப் பிட்ட காலத்திற்குள், குறிப்பாக 3 முதல் 4 ஆண்டுகளில், இலங்கையிடம் இருந்து பெறவேண்டிய கடனை, 10 முதல் 12 ஆண்டுகளுக்கு நீடிக்க முடியும் என்று இந்தியாவின் ஏற்றுமதி கடன் உத்தர வாத நிறுவனத்தின் தலைவர் செந்தில் நாதன் கூறியுள்ளார். (அ)

## மண்டைதீவு...

தமிழ்ப் போராளிகளின் உடல்கள் எடுப் பதுபோல மண்டைதீவு தோமையார் ஆலயக் கிணற்றையும் துப்புரவு செய் தால் சுமார் 60இற்கும் மேற்பட்ட இளை ஞர்களின் உடல்களை எடுக்க முடியும்.

இதன் காரணமாகவே இலங்கை இரா ணுவத்தினர் அந்த இடத்தில் உள்ள மக்க ளின் காணிகளைப் பறிக்க முயற்சிக்கின் றார்கள்.

மண்டைதீவில் சதாசிவம் செந்தில் மணி, வைரவநாதன் மகேஸ்வரி உள் ளிட்ட பலரின் காணிகளை இராணு வத்தினர் பலவந்தமாகக் கைப்பற்றி யுள்ளனர். இதனால் அந்த காணிகளுக் குச் சொந்தக்காரர்கள் இலங்கையின் பல பகுதிகளில் அகதிகளாக வாழ்கிறார்கள். நல்லிணக்கம் பேசும் அரசாங்கம், சமாதா னம் பேசும் அரசாங்கம் இப்பொழுதும் அவர்களின் காணிகளை பறிக்க முயற்சிக் கின்றமை மிக மோசமான செயலாகும்- என்றார். (அ)

## கொக்குத்தொடு...

கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழி யர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் மத்திய கொக்குத்தொடுவாய் பகுதியில் நிலத்தடி தண்ணீர்க் குழாய்களைப் பொருத்துவதற்காக வீதியோரம் குழி தோண்டியபோது இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

பாரிய புதைகுழி எனச் சந்தேகிக்கப் படும் இடத்திலிருந்து கடந்த 29ஆம் திகதி பெண்கள் மற்றும் ஆண்களின் ஆடைகளும் எலும்பு உள்ளிட்ட மனித எச்சங்களும் பொலிஸாரால் கண்டுபிடிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதித் ...

ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர் கள் கூறுகின்றார்கள். அப்படி அவர் களமிறங்கினால் நீங்கள் அவரை ஆதரிப் பீர்களா?' - என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

இன்னும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. வேட்புமனு கோரப்படவில்லை. தேர்தலுக்குக் காலம் உண்டு. அதனால் இப்போதே அது பற்றி தீர்மானிக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட் டால் அந்த நேரத்தில்தான் முடிவெடுப் போம்.

தேர்தலுக்கு முன் எதுவும் நடக்க லாம். இப்போது ஒரு தீர்மானம் எடுத்தா லும் அதைத் தேர்தலில் மாற்ற வேண்டி ஏற்படலாம். அதனால் தேர்தல் அறிவிக் கப்பட்ட பின்னர்தான் முடிவெடுப்பது ஆரோக்கியமானது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

## பொலிஸ்மா அதிபர் நியமனம்: மல்கம் ரஞ்சித் இரகசிய கடிதம்!



கொழும்பு, ஜூலை 08

புதிய பொலிஸ்மா அதிபரின் நியமனம் தொடர்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், சபாநாயகர் உள்ளிட்ட அரசமைப்புச் சபையின் உறுப்பினர்களுக்கு 3 பக்கங்களைக் கொண்ட இரகசியக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் பொலிஸ்மா அதிபர் பதவிக்குச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கும் இரண்டு பொலிஸ் அதிகாரிகளின் பெயர்களைக் கவனத்தில் எடுக்கவேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தங்களது கடமைகளை மீறியுள்ளார்கள் என்று இவர்கள் இருவருக்கும் எதிராகக் குற்றச்சாட்டுக்கள் இருப்பதால் இவர்களைக் கவனத்தில் எடுக்கவேண்டாம் என்று அனைத்துக் கத்தோலிக்க மக்களின் சார்பிலும் கேட்டுக் கொள்வதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிறீ லங்கா சுதந்திர கட்சியின் முக்கிய பதவி சந்திரிகாவுக்கு?

## அவர் வந்தால் கட்சி பலம் பெறும் என்கிறார் தயாசிறி ஜயசேகர எம்.பி.



கொழும்பு, ஜூலை 08

சர்வக் கட்சி அரசாங்கமொன்று நாட்டில் அமையவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் இருப்பதாக அந்தக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளவேண்டும் என்பதுதான் எமது விருப்பமாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரக் கட்சிக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பல அர்ப்பணிப்புக்களை செய்துள்ளார்.

அவர் அன்று தனது அதிகாரத்தின் ஊடாகத்தான் மகிந்த ராஜபக்ஷவை வேட்பாளராக களமிறக்கிய காரணத்தால்தான் அவர் நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

மைத்திரிபால சிறிசேனவையும் அவர்தான் வேட்பாளராக களமிறக்குமாறு தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து முன்னெடுத்த அந்த தேர்தல் செயல்பாடுகளுக்கும் அவர் தலைமைத் தாங்கினார்.

அவர் மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ள வேண்டும் என்பதுதான் எமது விருப்பமாக உள்ளது.

அவர் கட்சிக்கு வந்தால் மீண்டும் எமது கட்சி பலமடையும் என்றே நாம் கருதுகிறோம். எவ்வாறாயினும், இதுதொடர்பான இறுதி முடிவை அவர்தான் எடுக்க வேண்டும்.

அதேநேரம், எமது கட்சியின் தலைவர், ஆரம்பத்திலிருந்தே சர்வக்கட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்றுதான் வலியுறுத்தி வருகிறார்.

சர்வகட்சி அரசாங்கம் என்றால், ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒன்று, இரண்டு உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு ஆட்சி செய்வதல்ல. தேசிய அரசாங்கத்துக்கும் சர்வக்கட்சி அரசாங்கத்துக்கும் இடையிலும் வித்தியாசம் உள்ளது. தற்போதும் சுதந்திரக் கட்சியானது சர்வகட்சி அரசாங்கமொன்று அமையவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் உள்ளது-என்றார். (அ)

# "வெள்ளை வானில் கொண்டு சென்ற எங்கள் பிள்ளைகள் எங்கே உள்ளனர்?"

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மன்னாரில் கவனவீர்ப்பு




மன்னார், ஜூலை 08

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை 11 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில்

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பெற்றோர் என பலர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"வேண்டும், வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும்", 'எங்கே எங்கே உறவுகள் எங்கே?", "வீடுகளில் வைத்துக் கொண்டு சென்ற உறவுகள் எங்கே?","வெள்ளை வானில் கொண்டு சென்ற பிள்ளைகள் எங்கே?", "ஓ.எம்.பியும் வேண்டாம் - 2 இலட்சமும் வேண்டாம்", "சரணடைந்த உறவுகள் எங்கே?" உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா,

"ஐ.நா.சபையின் 53 ஆவது கூட்டத்தொடர் இடம் பெற்று வருகிறது. எங்களுக்கு ஒரு நீதி கிடைக்க வேண்டும். தொடர்ந்து இவ்வாறு போராட்டங்களை முன்னெடுக்க முடியாது. ஐ. நா. சபையை நாங்கள் இவ்வளவு காலமும் நம்பி வந்தோம். எங்களுக்கு நீதி கிடைக்கும் என்று. ஆனால், அந்த நீதியும் தாமதமாகிறது.இந்த அமர்விலையாவது எங்களுக்கு ஒரு நீதி கிடைக்கவேண்டும். கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நாங்கள் இந்த போராட்டத்தை வீதிகளில் நின்று முன்னெடுத்து வருகிறோம். ஆனால் எமக்கு எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. நாங்கள் உயிருடன் இருக்கும் வரை காணாமல் ஆக்கப்பட்ட

உறவுகளை தேடிய போராட்டம் தொடரும். தற்போது மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றது.தற்போது முல்லைத்தீவிலும் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இராணுவ முகாம்களை அகற்றினால் இன்னும் அதிக மனித புதைகுழிகள் கண்டுபிடிக்க முடியும்.

பிடித்துக் கொண்டு சென்ற பிள்ளைகள் இல்லை என்றால் அவர்கள் தான் கொலை செய்து புதைத்திருக்கவேண்டும். இராணுவ முகாம்களில் புதைக்கின்றமையினால்தான் அவர்கள் காணிகளை விடுகிறார்கள் இல்லை.அதனாலேயே சிங்கள மக்களை குடியேற்றவும்,புத்தர் கோவிலை அமைக்கவும்

நடவடிக்கைகள் எடுக்கின்றார். இதன் காரணமாக மனிதபுதை குழிகள் மூடி மறைக்கப்படும். எனவே, ஐ.நா.கூட்டத்தொடரில் ஆவது எங்களுக்கு நீதி கிடைக்கவேண்டும்-என்றார்.

(அ)

## புதிய பொலிஸ்மா அதிபர் எப்போது நியமிக்கப்படுவார்?

கொழும்பு, ஜூலை 08

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவின் பதவிக் காலம் முடிந்து-அவருக்கு வழங்கப்பட்ட கால நீடிப்பு முடிந்தும் 11 நாட்கள் ஆகின்றன. இன்னும் புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படவில்லை. இது தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

எப்போது புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படுவார் எனவும் அவர்கள் வினவினர். (அ)

## விரைவில் புதிய பொலிஸ்மா அதிபர்!

கொழும்பு, ஜூலை 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பார் என பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பெயரை அங்கீகரிப்பதற்காக சபாநாயகரால் அரசியலமைப்பு பேரவையை எந்த நேரத்திலும் அழைக்க முடியும் என பிரதமர் தெரிவித்தார்.

புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் எப்போது நடக்கும் என நேற்று சபையில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பிரதமர் இவ்வாறு கூறினார். (அ)

## இவ்வருட இறுதியில் உயர்தரப் பரீட்சை!

கொழும்பு, ஜூலை 08

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் நடத்தப்படும் காலப்பகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இதனைக் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் உயர்தரப் பரீட்சை இந்த ஆண்டின் இறுதியிலும், சாதாரண தரப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு முதல் காலாண்டிலும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.